தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஉ } விய—ஆவணி 1946—ஆகஸ்டு { மலர் ரு

மகிழ்ச்சியும் வாழ்த்தும்.

தமிழர்களின் தனிப்பெருந் தலைவர். வீரத்திரு. A. இராமசாமிமுதலியார் அவர்கள் மைசூர், சமத்தானத் திவானாக நியமிக்கப் பெற்றுள்ளமை கண்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம், சான்பிரான்சிஸ்கோவில நிகழ்ந்த உலக அமைதி மாநாட்டிற்கு இந்தியஉரிமை உறுப்பினராகச் சென்று, தமது ஒப்பற்ற நாவன்மையால பிறநாட்டினரெலலாம போற்றி உவகையொலி எழுப்புமாறு சொற்பொழிவாற்றித தமிழர் குலத்திற்கே பெருமையளித்தவர்கள், சர். A. இராமசாமி முதலியாராவார்கள். இதுபோதும்அனைத்துலகப் பொருளாதாரப்பேரவையின் தலைவராக உள்ளார்கள். எல்லா இந்தியப் பொறுப்பாட்சிக் கழக உறுப்பினராக இருந்து பெரும் பணியாற்றிப் புகழ் கொண்டார்கள் இத்தகு தக்காரை மைசூர், சமத்தானம இதற்குமுன் எப்போதும திவானாக ஏற்றிலங்கியதை யாமறிந்தோமில்லை. இத்தக்காரைத் திவானாக ஏற்றதால் மைசூர் சமத்தானத்திற்குப் பெருமை மிகுந்ததெனக் கூறலாம். திரு. இராமசாமி முதலியார் அவர்கள் தமிழன்னையின் தண்ணருளால் மேலும் பற்பல உயர்பதவிகள் பெற்றுச் சிறக்க வேண்டுமெனத் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்றோம்.

வருந்துகின்றோம்.

நம் சங்க இராதாகிருட்டினத் தொடக்கப்பள்ளிஆசிரியராகவும், மாணவர் விடுதியாட்சியாளராகவுமிருந்து பணியாற்றிச் சங்கத்தைச் சிறப்பித்த திருவாளர், T.K. துரைசாமிபிள்ளை அவர்கள் 8-8-'46ஆம் நாள் தம் இளம் அகவையில் நோய்வாய்ப்பட்டு இவ்வுலக வாழ்வை நீத்தார் என்பதனைக் கேட்டு மிகமிக வருந்துகின்றோம. இவரைப் பிரிந்து வருநதும இவர் மனைவி மக்களுக்கும, சுற்றத்தார்க்கும எம ஆழ்ந்த துயரினை அறிவித்துக் கொள்ளுகின்றோம். இவரின்னுயிர் இறைவன் றிருவடி நீழலில் இன்புற்றுத் திளைக்கவேண்டி இறைவனை வழுத்துகின்றோம்.

கோ. சி. பெரியசாமிப் புலவர்,
பொழிலாசிரியர்.

கல்விச் சீரமைப்பு

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள் B.A., L.T.
தலைமையாசிரியர், உயர்நிலைப்பள்ளி, பாபநாசம்.

நமது புதிய கல்வி அமைச்சர் திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கலவி அமைச்சர் பொறுப்பேற்றதிலிருந்து தாய்மொழிக்காக அரிய பல நன்மைகள் புரிந்து வருவது பெரிதும் போற்றத்தக்கதாகும். முதலில் 4, 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில பாடம கற்பித்து வருவதை நிறுத்தியிருப்பது இள மாணவருடைய தலையிலிருந்து பெரியதொரு சுமையை இறக்கியதாகும். பால் மண மாருப் பாலர்களுக்குத் தங்கள் தாய்மொழியிலும் வேண்டிய பயிற்சி பெருதிருக்கும்பொழுதே அயல் மொழி யொன்றைப் பயிற்றிவருவது பெரும் பேதைமைத்தேயாகும். இதனை முதலில் நீக்கிய அறிவுடைமை பாராட்டற்பாலதாகும்.

இதற் கடுத்தபடியாக, இரண்டாந்தரப் பள்ளிகளிலெல்லாம் (Secondary Schools) தாய் மொழியையே முதன் மொழியாக்கி அதற்கேற்ற சீரமைப்புச் செய்ய முன் வந்திருப்பது எத்துணையோ மேம்பாடுடைய செயலாகும். ஏறக்குறைய ஒரு நூற்ருண்டாக ஆங்கிலமே முதல் மொழியாய்க் கல்வியறிவுடையோரை யெல்லாம் தாய்மொழிப் பேதைகளாக்கி வந்ததுடன் இவ்விழி தகைமையில் பெருமை பேசவும் செய்ததெனின், இதனினும் மானங்கெட்ட நிலை நினைப்பதற்கும் அரிதாகும். இப்பொழுது தான் கல்வி யளித்தலில் பெரும் புகழ் வாய்ந்த ஓர் தமிழ் மகன் மற்றெல்லா மண்டிலங்களுக்கும் நல்வழி காட்டி, நம தன் மதிப்பை நிலை நிறுத்தி யாவரையும் எளிதில் கல்வியறிவுடையவராக்க முன்வந்திருப்பது பொதுவாகச் சென்னைமண்டிலத்தினரும் சிறப்பாகத் தமிழ் நாட்டினரும் பெருமை யடைய வேண்டியதொரு செய்தியாகும்.

மூன்ருவதாகத் தாய்மொழி வழிக் கல்வியையும் முன்னிலும் மிகுதியாகக் கட்டாயமாக்கிக் கல்லூரிகளிலும் புகுத்தி வருவதும் பேரறிவாண்மைப் பாலதேயாகும்.

இனி இவற்றிற்கேற்ப செய்யத்தக்கனவற்றை இயம்பல் ஏற்புடைத்தாகும். அவையாவன :—

1. உளநூல் (Psychology), மொழிநூல் (Philology) வல்லுநர்களின் முடிபுக்கேற்ப ஆங்கிலம், இந்தி, சமக்கிருதம் முதலிய வேற்று

மொழிகளை முதல், இரண்டாந்தரங்களில் (I, II Form) இருந்தே பயில்விக்கும் கொடுமையையும் விரைவில் ஒழித்து இம்மொழிகளைக் கல்லூரிகளில் (Colleges) மாத்திரம் விருப்ப பாடமாகக் கற்பிக்கும்படி ஏற்பாடாக வேண்டும்.

2. தாய்மொழி வழிக் கல்வி இனிது நடைபெறத் தக்க கலைச் சொற்களைத் தேர்வது இன்றியமையாததாகும். இவ்வகையில் தமிழ் மக்கள் ஏனையோரினும் முன்னேற்றங் காண்பித்திருப்பது மகிழத்தக்க தாகும். உயர்நிலைப் பள்ளிகளுக்கு (High Schools) த் தேவையான சொற்கள் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப் பெற்று அரசியலாராலும் அங்கீகரிக்கப்பட்டுப் பொது மக்களாலும் பின்பற்றப்பட்டு வருவதைச் சிறிது செப்பஞ் செய்து கட்டாய மாக்குங் காலம் அணுகி விட்டதென்னலாம். இவ்வகையில் நமது பொழில் முன்பே சில வழிகாட்டி வந்திருப்பது குறிப்பிடற்பாலதாகும்.

3. கல்லூரிகளுக்கும் (Colleges) வேண்டிய தாய்மொழிக் கலைச் சொற்களைத் தக்க தமிழ் வல்லுநர், பேராசிரியர்களைக் கொண்டு படைத்தலில் இனிக் காலங் கடத்தல் கூடாததாகும்,

4. அரசியல் துறை ஒவ்வொன்றிற்கும் அவ்வாறே தக்கார்களைக் கொண்டு கலைச் சொல்லாக்க வேலை தொடங்கல் அவசரப்பட்ட செயலாகாது. காங்கிரசு எனும் அரசியல் கட்சியின் திட்டப்படி மாகாணங்களை மொழிவழிப் பிரித்து அவ்வம் மொழியில் அரசியலை நடத்துவதற்கு இது தக்க முன்னேற்பாடேயாகும். அறிவியல் கண்டு பிடிப்புகளும், நாகரிகமும் அன்றாடம் முன்னேறி வருவதால் அவ்வப் போது அவற்றிற் கேற்ற சொற்களைச் செப்பஞ் செய்ய ஓர் நிலைத்த குழுவை அமைக்கவேண்டும். இவ்வாறு துருக்கி நாட்டு அரசியலார் அமைத்துத் துருக்கி மொழியை முன்னேற்ற மடையச் செய்ததை முன் பொழிலில் வெளியிட்டுள்ளோம். பிரெஞ்சு நாட்டினரும் அவ்வாறே செய்து வருவதும் பின் பற்றத் தக்கதாகும்.

5. இப்பொழுதுள்ள அலுவலாளர் யாவரும், பள்ளி யாசிரியர் உள்பட, தாய்மொழிப் பேதைகளாதலின் அவர்களுக்கு வேண்டிய தாய்மொழிப் பயிற்சி அளித்தல் அவ்வத் துறையினரின் கடனாகும். இதற்கு வேண்டிய பொறுப்பையும் நமது கல்வி அமைச்சர் ஏற்றுப் பெரும் புகழும் புண்ணியமும் எய்துவாராக!

* கல்லாடனார்.

வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள்,
விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

கல்லாடனார் என்னும் பெயர் சங்கப்புலவருள் ஒருவரையும் பிற் காலப் புலவர் சிலரையும் குறித்து வழங்கும். அவர்களுள் கல்லாடம் என்னும் அகப்பொருளிலக்கியத்தை யியற்றிய கல்லாடர் என் பாரும், பதினோராந் திருமுறையில் 'திருக்கண்ணப்பதேவர் திருமறம்' என்ற பாடலையியற்றிய கல்லாட தேவ நாயனாரும், தொல்காப்பியச் சொல்லதிகார வுரையாசிரியராகிய கல்லாடரும் சங்ககாலத்திற்குப் பிற்பட்டவர்களாவர். இங்கு நாம் பேசக் கருதியது சங்கப்புலவர் குழுவிற் சேர்ந்த கல்லாடனாரைப் பற்றியேயாம்.

கல்லாடனார் சங்ககாலத்துப் புலவர்களில் ஒருவர். இவர் தம் முன்னோர் வடக்கே வேங்கடமலைப் பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். அங்கே நிகழ்ந்த பஞ்சத்தின் காரணமாக மீண்டும் தமிழ் நாட்டிற் குடிபுகுந்தனர். இதனை, (391-ஆம் புறப்பாடலில்)

வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்குவந் திறுத்தவென் இரும்பே ரொக்கல்

என இப்புலவர் கூறுதலால் அறிகின்றோம். கல்லாடம் என்பது தமிழ் நாட்டிலுள்ளதோரூர். அவ்வூரில் வாழ்ந்தமைபற்றி இவர் கல்லாடனார் என அழைக்கப்பெறுகின்றார். சங்கத்தொகை நூல் களுள் இவர் பாடியனவாகப் பதினான்கு பாடல்கள் உள்ளன. இப் பாடல்களை யாதரவாகக் கொண்டு இப்புலவரது வாழ்க்கை வர லாற்றை ஒரு சிறிது நோக்குவோம்.

பொறையாறு என்பது சோழ நாட்டிலுள்ளதோர் ஊர். அவ் வூர்க்குத் தலைவனாகிய பொறையாற்றுக்கிழான் என்னும் வள்ளலைக் கலைச்செல்வர் பலரும் கண்டு அளவளாவி மகிழ்கின்றனர். நம் கல்லாடனாரும் அவ்வள்ளலைக் காணச் செல்கின்றார். அந்நிலையில் அவ்வள்ளலை நன்குணர்ந்த முதியோர் ஒருவர் இப்புலவரது வறுமை நிலைமையை நன்குணர்ந்து இவரை வள்ளலிடம் அறிமுகப் படுத்து கின்றார். "அன்புமிக்க தலைவ, என்னுடன்வந்த இவ்விளைஞன் செந் தமிழ் பயின்ற நல்லிசைப் புலவன், நின்னை முன்னுங் காண வந்துள் ளான். தக்க ஆதரவில்லாதவன்; இவனை யாதரித்தல் நினது கடமை யாகும்,' என முதியவர் கூறி முடித்தார். அதனைக்கேட்டு அருள் கூர்ந்த தலைவன் கல்லாடனார்க்கு வேண்டும்பொருள்களை நிறையக் கொடுத்து உபசரிக்கின்றான். பரிசில்பெற்று மகிழ்ந்த கல்லாடனார்

---

* 25—7—46-ல் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திற்பேசியது.

வள்ளலைநோக்கி, "பெருமை மிக்க தலைவ, நின் வண்மையியல்பை நன்குணர்ந்தபெரியோர் எனது எளிமை நிலையைக்குறிப்பாலுணர்ந்து எனக்குச் சார்பாய் நின்று வேண்டுதலால் அவ்வேண்டுகோள் மொழியினையே புகலாகக் கொண்டு நின்னைக் காணவந்தேன்; எனக்கு நீ வேண்டுவன கொடுத்து மகிழ்வித்தனை. இங்ஙனம் இரப்போர்க்கு எய்ப்பில் வைப்பாகவிளங்கும் நீ நின்மனைவியுடன் இன்புற்றுநெடிது வாழ்வாயாக. நின்னாட்டின்கண் நீர்வேண்டும் செவ்வியறிந்து வானம் மழையைப் பெய்தலால் நின் வயல்களெல்லாம் வேலியொன்றுக்கு ஆயிரக் கலன்கள் காணும் மிக்க விளைவினையுடையவாகுக" என்னுங் கருத்தமைய,

"முன்னும் வந்தோன் மருங்கிலன் இன்னும்
அளிய னாகலிற் பொருநன் இவன்என
நின்னுணர்ந் தறியுநர் என்னுணர்ந்து கூறக்
காண்கு வந்திசிற் பெரும............
... ...
துளிபத னறிந்து பொழிய
வேலி யாயிரம் விளைகநின் வயலே" (புறம் 391)

என வாழ்த்துகின்றார்.

பின்பு ஒருநாள் கல்லாடனார் சோழ நாட்டில் அரிசிலாற்றங் கரையில் உள்ள அம்பர் என்னும் ஊருக்குச்செல்கின்றார். அவ்வூரில் வாழும் அம்பர்கிழான் அருவந்தை யென்பான் வைகறைக் காலத்தே இப்புலவர் பெருமானை எதிர்கொண்டழைத்து வறுமைநோய் நீங்க உபசரித்துப் பாராட்டுகின்றான். இவ்வண்மையினை,

"வறனியான் நீங்கல் வேண்டி யென்னரை
நீல்நிறச் சிதாஅர் களைந்து
வெளிய துடீஇயென் பசிகளைந் தோனே
காவிரி யணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி யம்பர் கிழவோன்
நல்லரு வந்தை வாழியர்," (புறம்-385)

என எடுத்துரைத்துக் கல்லாடனார் அவ்வள்ளலை உளமகிழ்ந்து வாழ்த்துகின்றார்.

இவர் காலத்தே பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பான் தன்னை மிகவும் இளையனெனக் கருதியெதிர்த்த சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் எழுவரையும் தான் ஒருவனாகவே நின்று தலையாலங்கானம் என்ற போர்க்களத்தில் பொருது

வெற்றி பெறுகின்றான். இச்செய்தி தமிழகம் முழுவதும் பலராலும் பாராட்டி யுரைக்கப்பெற்றது. இவ்வெற்றியின் ஆரவாரத்தை,

"பொன்னணி நெடுந்தேர்த் தென்னர் கோமான்
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங் கானத் தார்ப்பு," (அகம்-209)

என நம் கல்லாடனார் பாராட்டுகின்றார். இப்போர் நிகழ்ந்த தலையாலங் கானம் என்னும் ஊர் திருவாரூரிலிருந்து குடவாயில் செல்லும் பெருவழியில் ஒரு திருத்தலமாக விளங்குகின்றது. இவ்வூரிற் பெற்ற வெற்றியினோடமையாது செழியன் பகைவர் நாட்டிற் சென்றமையால் பகை வேந்தர் நாடு பாழாயினமை யுணர்ந்த கல்லாடனார் பாண்டியனைப் பாசறையிற் சென்று காண்கின்றார்.

"தலையாலங் கானத்தின்கண் போரை எதிர் நின்று கொன்ற காலன் போலும் வலியினையுடைய வேந்தே, நின் பகைவர் நாட்டின் வழியாக நின்னைக் காண வருகின்றேன்; அங்கு நின் படை யெடுப்பால் உண்டான அழிவு மிகவும் பெரிது; நின் யானைப்படையால் நீர்த் துறைகள் கலங்கி யழிந்துள்ளன; நின் படை வீரர்கள் பகைவர் நாட்டைச் சூறையாடுதலால் அந்நாட்டில் நல்ல வுணவுப் பொருள்கள் பாழாயின; சோலைகள் யாவும் உருக்குலைந்து போயின; நின் வீரர் எரியூட்டுதலால் வீடுகள் பலவும் கரிந்து புகைந்து சிதைந்து காணப் படுகின்றன; இவற்றைக் கண்டோர் பலரும், தன்னை நெருங்க வொண்ணாத சூழ்ச்சித் தெளிவினையுடைய பாண்டியன் இன்னும் இத்தன்மைய பல கொடுமைகளையும் பகைவர் நாட்டின்கண் செய்வன் எனச் சொல்லுவாராயினர்; இவ்வழிவினை நேரே கண்ட யான் நின்னைக் காண வந்தேன் என்பார்,

"நண்ணார் நாண நாடொறுந் தலைச்சென்று
இன்னும் இன்னபல செய்குவன் யாவரும்
துன்னல் போகிய துணிவி னோனென
ஞாலம் நெளிய ஈண்டிய வியன்படை
ஆலங் கானத் தமர்கடந்து அட்ட
கால முன்பநிற் கண்டனென் வருவல்,"

எனக் கூறுகின்றார். (புறம்-23)

கல்லாடனார் தாம் பகைவர் நாட்டிற் கண்ட இரங்கத் தக்க காட்சி யொன்றினைப் பாண்டியனுக்கு எடுத்துரைக்கின்றார்.

ஆளற்ற அருஞ்சுரமாகிய காட்டிலே ஆண் மானொன்று புலியின் பால் அகப்பட்டுக்கொண்டது; அதனைக் கண்டு உளங் கலங்கிய

பெண் மான் தன் கன்றினைப் பாதுகாத்து வளர்த்தற் பொருட்டுக் காட்டில் முளைத்த வேளைக் கீரையின் பூவைத் தின்று உயிர் வாழ் கின்றது; இச் செய்தியை,

"அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை யோங்கிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளி லத்த மாகிய காடே," (புறம்–23)

என்ற அடிகளால் புலவர் விளக்குகின்றார்; புலியை யொத்த வேந்தன் ஆகிய நீ பகைவரைக் கொன்ற பின்னர் அவர் தம் மனைவிமார் தம் இளம் பிள்ளைகளைப் பாதுகாத்தற் பொருட்டுப் புல்லிய கீரையைத் தின்று உயிர் வாழ்கின்றார் எனப் பாண்டியனை நோக்கிக் குறிப்பால் வேறொரு பொருளுந் தோன்றக் கல்லாடனார் கூறியுள்ளமை காணலாம்; இவ் வடிகளால் அவனது வெற்றி மேம்பாடும் நன்கு புலனாகின்றதன்றோ!

கல்லாடனார் தம் காலத்தே தமிழ் நாட்டில் நிகழ்ந்த சிறப்புடைய நிகழ்ச்சிகளைத் தம் பாடலிற் குறித்துள்ளார். வேங்கட மலையை யாண்ட புல்லி யென்பானையும் அவனது வேங்கட மலையையும்,

"கல்லா விளையர் பெருமகன் புல்லி
வியன்றலை நன்னாட்டு வேங்கடம்" (அகம்-83)

எனவும்,

"மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடம்" (அகம்-209)

எனவும் கல்லாடனார் பாராட்டுதலால் இப்புலவர் தம் முன்னோர் உறைவிடமாகிய வேங்கடத்தின் இயற்கை யெழிலினையும் புல்லியின் பெருந்தகைமையினையும் நேரே கண்டறிந்தவர் என அறிகின்றோம்.

அஃதை யென்னும் பெயருடைய வள்ளல், விலக்குதற்கரிய இடுக்கணால் வருந்தியபோது வாய்மையிற் றவறாத கோசர் என்பார் கேடுற்ற காலத்தும் தாம் கொண்ட நட்பிற் பிழையாராய் அவனைப் பாதுகாத்தனர். இங்ஙனம் அல்லற்காலத்தும் நட்பிற் பிழையாத கோசரது நற்செயலை,

"நன்றல் காலையும் நட்பிற் கோடார்
சென்று வழிப்படூஉந் திரிபில் சூழ்ச்சியின்
மாவீசு வண்மகிழ் அஃதைப் போற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற்கோசர்" (அகம்-113)

என இப்புலவர் பாராட்டுகின்றார்.

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேரமன்னன் நன்னன் எனபானை வாகைப் பெருந்துறையென்னுமிடத்தில் நிகழ்ந்த போரிற் கொன்று முன் இழந்த நாட்டினை மீட்டும் கைப்பற்றினன். இப்போர் நிகழ்ச்சியை,

“ இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூண் நன்னன் பொருது களத்தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன, வளம்” (அகம்-199)

என்ற அடிகளால் இப்புலவர் குறிப்பிடுகின்றார்.

மலையமான் திருமுடிக்காரி யென்பான் கொல்லிமலையையாண்ட வல்வில் ஓரியென்னும் பெயருடைய குறுநிலமன்னனைக் கொன்று தனக்குத் துணையாகிய பெருஞ்சேரலிரும பொறை என்றபெயருடைய சேரமனனனுக்கு அக்கொலலி மலையை உரிமையாக்கினன். இச் செய்தியை,

“ முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செலலா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி” (அகம்-209)

என வருந்தொடர்களால் இனிது புலப்படுத்துகின்றார். இவ்வாறு கல்லாடனார் பாடல்களில் அவர் காலச்செய்திகள் பல காணப்படுதல் கொண்டு இப்புலவர் இன்றியமையாத வரலாறுகளைவிடாது குறித்து வைக்கும் வரலாற்றாசிரியர் ஆவர் என அறிகின்றோம்.

காதலர் இருவரது காதல் வாழ்வினைச் சிறப்பித்துப் பாடுதலில் சங்கப் புலவர் பெரிதும் ஈடுபாடுடைய ரென்பது நாடறிந்த செய்தி யாகும். காதல் வாழ்விலே கூடுதல் ஊடுதல் முதலிய நிகழ்ச்சிகளுள் பிரிவு நிகழ்ச்சியே காதலர் இருவருள்ளத்தும் பொருந்திய ஒன்றி யுயர்ந்த அன்பின் பெருமையை விளக்கும் பகுதியாகும். தலைவனது பிரிவினல் வருந்தும தலைவிக்கு அப்பிரிவு மிகுதியும் துன்பந் தரும். அந் நிலையில் உயிர் போயினும் நன்றெனு நினைப்பதும் தலைவிக்கு இயல்பாகும். இந் நிலையில் அவளது மன நிலையை நினைந்து பாடுவது தான் புலமைக்கு அழகு.

(தொடரும்.)

வள்ளுவர் புரட்சிக்காரர்.

புலவர். மு. கோவிந்தசாமி அவர்கள்.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் ச, பக்கம் 104)

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கம் குன்றக் கெடும்.

எனச் சரியானதோர் சாட்டை; சூடு, கொடுக்கிறார். எப்படி புரட்சி! அக்காலத்தில் அடர்ந்திருந்த ஊழலை யழிக்க இதனினும் வேறு வழி தான் என்ன ?

இத்தகைய புரட்சியினை அவர்கள் செய்ததெல்லாம், நாட்டின் உள்ளத்தே ஓர் பெரிய புரட்சியை (மாறுதலை) உண்டாக்க வேண்டுமென்பதற்காகத் தான். இன்று புரட்சி யென்று சொல்லும்போது நம் அகத்தே இரத்தப் புரட்சி பற்றிய எண்ணங்களே உலாவுகின்றன. கூட்டங்கள், ஆவேசப் பேச்சுகள், குழப்பங்கள், தடியடி, துப்பாக்கி சத்தம், சிறை, கடுங்காவல், தூக்குமேடை, நாடு கடத்தல் இப்படிப் பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் அதில் நடந்தாக வேண்டும் என நினைக்கிறோம். அவையல்ல புரட்சி. அவையும் நடப்பதுண்டு. அவ்வளவே.

அவை நடவாமல் அமைதியாகவும் இருக்கலாம். ஆனால் தான் கருதிய மாறுதல்கள் நிகழ்ந்தாக வேண்டும். பழமை யழிந்தாக வேண்டும். புதுமை பிறந்து விடவேண்டும். இவை நடந்து விட்டால் அதுவே உண்மைப் புரட்சி.

அசோகன், டால்ஸ்டாய், காந்திஜி போல அதனை அஹிம்ஸை வழியும் கொண்டு வரலாம். அன்றி, பிரஞ்சு, சீன, ரஷிய புரட்சிகள் மாதிரி இரத்தஞ் சிந்திக் கொலைகளின் மூலமும் கொண்டு வரலாம். அவை அக்கால மக்கள் மனப்போக்கு, நாட்டில் சூழ்நிலை இவற்றைப் பொறுத்தவாகும்.

ஆனால் வள்ளுவரின் புரட்சி உண்மையான ' அஹிம்ஸை ' வழிப் பட்டது தான் என்பதே எனது நம்பிக்கை. தக்க சான்றுகளும் உள்ளன. தீவினை யச்சம், கொல்லாமை, புலான் மறுத்தல் இவ்வதிகாரங்களே கூறுமே?

எத்தனை ஆயிரம் கொலை. சித்திரவதை! ஐரோப்பாவிலும், ஏன் ஆசியாவிலுங் கூட மதங்களைப் பரப்பக் கத்தி முனையில் எத்தனை ஆட்சிகள் கங்கணங் கட்டிக்கொண்டு வேலை செய்தன? ஆனால் அமைதி வரவில்லை! அன்று அமைதியை ஓரளவு கொண்டு வந்த பெரியவர்களும், தமது மதத்தில் இருந்துகொண்டே, மற்ற மதங்களுடன் சமரசப் பான்மை காட்டினர். அப்பர், நம்மாழ்வார், ஜைனர், ஏன் இஸ்லாமிய, கிருத்துவருங் கூட. இன்று எல்லா மதங்

களிலும் அடிப்படையான கொள்கைகளைத் திரட்டிச் சமரச மதம் ஒன்றினை உலக முழுதும ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியும் சொள்கையும் முறறி வருகின்றது. பிரம்ம ஞான சங்க முதலிய வெல்லாம் அந் நெறியில் தொடங்கிய புது முயற்சிகளே யாகும். ஆனால் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே பொதுக் கடவுள் வாழ்த்து அவரது உள்ளத்தே ஏன் தோன்ற வேண்டும்! வள்ளுவரை எம்மதத்தில் சேர்க்கலாம். வேண்டுமானல் 'மனித மதத்தில்' சேர்க்கலாம். இத்தகையதோர் பொதுமை நெறி அன்று முதல் இன்றும் ஒரு பெரும் புரட்சிக்கு அடிகோலித்தானே வருகிறது?

அன்று, நாட்டு வாழ்க்கையில் 'வறட்டுக் துறவு'க் கொள்கை மக்களை மயக்கத் தொடங்குகிறது. உலகில், மனைவி, மக்கள், குடும்பம் எதிலும் வெறுப்பு. எதனையும் விட்டு, பிச்சை யேற்றுண்டு சோம் பேறியாகத் திரிவதே ஞானம் என்ற வெறித்தனம் தலைகாட்டுகிறது. இவ்வாழ்வில் மக்கள் மந்தை மந்தையாய்ச் சேர்வதைக் காண்கிறார். உழைக்க வேண்டிய முயற்சி யில்லையல்லவா?

உலகை உயிர்ப்பிக்கும் இல்லற வாழ்வு ஆட்டங் கொடுக்கிறது. மக்கள் வளர்ச்சியும், உழைப்பும் நின்று விடும் போலுள்ளது. இதே நிலை நீடித்தால் பிச்சை யிடுவாரையுங் காணமுடியாது. அறங் கேட்பாரும் அகப்படார். எங்கெங்கும் சுற்றுகிறார் வள்ளுவர். 'அறமெனப் பட்டதே இல்வாழ்க்கை' என அறை கூவுகிறார். அவ் வாழ்வே 'வானுறையும் சொர்க்கம், மோக்கம்' எல்லாந் தரும். துறந்தார்க்கும் துப்புரவாகிச் சோறிடும் இல்லறமே அதனினும் உயர்ந்ததும், துன்பமின்றி எளிதாகப் புண்ணியம் வரும் வழியுமாம் என்கிறார். அதே இல்லறத்துடன் துறவறத்தை (துறவு மனப்பான்மை) இணைக்கிறார். இல்லறத்தே 'ஞான யோகங்' காட்டி ஓர் கீதையை அருளுகிறார். 'பகுத்துண்டு பல்லுயிரோம்பல்' 'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற்கே' என்ற உண்மையான துறவினை உரைக்கிறார். இங்ஙனம் இல்லறத்தில் துறவறத்தை இணைத்த மாபெரும புரட்சி அவரதே. இப்படி யெல்லாம் தமது 'குறள்' மூலம் தமிழகத்தையே மாற்றி யமைத்த வள்ளுவர் ஓர் வணக்கத்திற்குரிய புரட்சிக்காரர். அவர் தம் புரட்சி மீண்டும் கனல்வதாக!

நம்பியாண்டார் நம்பியும் ஞானசம்பந்தரும்.

திருவாளர். வித்துவான். ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
தமிழ்விரிவுரையாளர், அண்ணுமலைப்பல்கலைக்கழகம்,
அண்ணுமலைநகர்.

இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னே நம்தமிழ் நாட்டில் தோன்றித் தமிழும் சைவமும் உய்யத் திருநெறித் தமிழோதி நம்மை உய்வித்த பெருமக்களான சமய குரவர் நால்வர் பாலும் பேரன்பும் அதனுல் அவர்பால் பேரீடுபாடுமுற்று அவர்களை வியந்து பல தமிழ் நூல்கள் எழுதிய சான்ருேர் பலராவர். அவருள் நம்பியாண்டார் நம்பிகள் தொன்மையும் முதன்மையு முடையவராவர். இவர் தாம் பாடியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில் ஞானசம்பந்தரையும் நாவரசரையும் நம்பியாரூரரையும் வியந்து பாடியுள்ளார். இன்னும், பதினேராந் திருமுறையில் ஞானசம்பந்தரையும் நாவரசரையும் இவர் புகழ்ந்து பாடிய நூல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள்ளே திருவந்தாதி நீங்கலாக ஏனையவை ஞானசம்பந்தருக்கும் நாவரசுக்கும் உரியவாய் இருத்தலை நோக்கின், இவ்விரு பெருமக்கள் பாலும் நம்பிகட்குப் பெருமதிப்பும் பேரீடுபாடும் உண்டென்பது புலப்படுகிறது.

நம்பியாண்டார் நம்பிகள் இற்றைக்குத் தொள்ளாயிரமாண்டுகட்கு முன்பே, சோழநாட்டுத் திருநாரையிலே ஆதிசைவர் குடியிலே பிறந்தவர். இதனை "நாரையூரினில் ஆதிசைவமறையோன்பால், வையமெலா மீடேறச் சைவம வாழ மாமணிபோல்" பிறந்தருளினுரெனத் திருமுறை கண்டபுராணம் கூறுகின்றது. பத்தாம் நூற்ருண்டின் பிற்பாதியிலும் பதினேராம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் இருந்த இராசராச சோழன் காலத்தே இருந்தவர். அவன் மூவர் முதலிகள் வழங்கியருளிய சைவத் திருமுறைகளைப் பெறுதற்குத் துணைசெய்தவர். முதலேழு திருமுறைக்கும் நம்பியாண்டார் நம்பிகளே திருவருள் துணையாகக்கொண்டு இசை வகுத்தாரென்றும் கூறுவர்.

நம்பியாண்டார் நம்பிகளின் பெற்ருேர் பெயர் முதலியன விளங்கத் தெரிந்தில. இவர் இளமையிலேயே திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவருள் பெற்றவரென அவர் வரலாறு கூறுகின்றது. பதினேராந் திருமுறையில் நம்பியாண்டார் பொல்லாப்பிள்ளையார் மேல்பாடிய திருவிரட்டைமணிமாலையும் தொகுக்கப்பெற்றிருக்கிறது. இராசராசன் திருமுன்பே திருமுறை தொகுக்கப் பெற்றதென்பது. "நம்பிகழல் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சச் சித்திதரும் இறைமொழிந்த திருமுகப்பாசுரமுதலா, உய்த்த பதிகங்களையுமொரு முறையாச் செய்க எனப் பத்திதருந் திருமுறைகள் பதினென்ருப் பண்ணினுர்" என்ற திருமுறை கண்டபுராணத் திருவிருத்தத்தால் அறிகின்ருேம்.

நம்பியாண்டார் நம்பிகள் பொல்லாப் பிள்ளையார் திருவருள் பெற்று அவர்பால் கலைத்துறை பலவும் கற்றுப் புகழ் நிறுவிய பின்பு இராசராசன் வேண்டுகோட்கிசைந்து பிள்ளையார்அருளால்திருமுறை கண்டனர். அதன் பயனாக அவர் நம்பியாரூரர் அருளிய திருத் தொண்டத் தொகையின் பொருளாக, உணர்ந்தவற்றைத் திருத் தொண்டர் திருவந்தாதியாகத் தொடுத்துப் பாடியருளினர்.

நம்பியாண்டார் நம்பிகள் இராசராசன் பொருட்டுத் திருமுறை கண்டதும் பண் வகுத்ததுமாகிய செயல்கள் செய்ததோடு திருச் சிற்றம்பலமுடையான்பேரில் திருவிருத்தமும், ஞானசம்பந்தர் நாவரசர் என்ற இருவர் பேரிலும் பல நூல்களும் செய்துள்ளார். இது முன்பும் கூறப்பட்டது. இவர் இயற்றியனவாகப் பதினோராந் திருமுறையில், பத்து நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள், பொல்லாப்பிள்ளையாரைத் திருவிரட்டைமணி மாலையாலும், திருச் சிற்றம்பலமுடையானைக் கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தாலும், திருத்தொண்டர்களைத் திருவந்தாதியாலும், திருநாவுக்கரசரைத் திரு வேகாதசமாலையாலும் அவர் பாராட்டிப் பரவியிருக்கின்றார். எஞ்சி நிற்கும் ஆறு நூல்களும் ஞானசம்பந்தரைப் பாராட்டிப் பரவுவனவே யாகும். திருவந்தாதியிற் காணப்படாத திருவாதவூரரை, கோயிற் றிருப்பண்ணியர் விருத்தத்தில்,

"வருவா சகத்தினில் முற்றுணர்ந்தோன் வண்டில்லை மன்னைத்
திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தரு திருக்கோவை கண்டேயு மற்றப்பொருளைத்
தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே" (58)

என்று பாராட்டியுள்ளார்.

இவ்வாற்றால் நோக்கின், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், திருவாதவூரர் ஆகிய நால்வரையும் நம்பியாண்டார் நம்பி பாராட்டியிருப்பது தெளிவாகும். ஆயினும், ஞானசம்பந்தரை மட்டில் ஆறு தமிழ் நூல்களாற் சிறப்பித்துப் பரவியிருப்பது, அவர் பால் இந்நம்பிகட்கு இருந்த தனி மதிப்புப் பெரிதென்பது துணியப் படும்.

இவையாறும் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை யென்பனவாகும். இவை யாவும் ஞானசம்பந்தர் வரலாறு, அவர் செய்த அருட்செயல், அருளிய திருப்பதிகம், பிறந்த சீர்காழிப்பதியின் சிறப்பு முதலியவற்றைப் பாராட்டிப் புகழ் கின்றன. 'இவற்றுள்ளும் ஆளுடையபிள்ளையார் திருத்தொகையில் வரலாற்று நிகழ்ச்சி முற்றும் கூறப்படுகின்றன. ஏனையவற்றுள், சிற்சிலவே சிறப்பிக்கப்படும். திருமும்மணிக்கோவைக்கண் ஞான சம்பந்தரின் செயல்வகை சிலவற்றை யழகுறக் கூறுவர்.

அரிசினக் கடகரி யதுபட வுரித்த
புடர்சடைக் கடவுள்தன் திருவரு ளதனால்

பிறந்தது, கழுமல மென்னும் கடிநக ரதுவே;
வளர்ந்தது, தேங்கமழ் வாவிச் சிலம்பரை யன்பெறு
பூங்குழல் மாதிடு போனக முண்டே;
பெற்றது, குழகனைப் பாடிக் கோலக்காப் புக்கு
அழகுடைச் செம்பொற் றாள மவையே;
தீர்த்தது, தாதமல் மருகல் சடையனைப் பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனை விடமே;
அடைத்தது, அரைசோ டிசையா வணிமறைக் காட்டுக்
குரைசேர் குடுமிக் கொழுமணிக் கதவே;
ஏறிற்று, அத்தியுமாவும் தவிர அறத்துறை
முத்தின் சிவிகை முன்னாள் பெற்றே;
பாடிற்று, அருமறை யோத்தூர் ஆண்பனை யதனைப்
பெருகிற மெய்தும் பெண்பனை யாவே;
கொண்டது, பூவிடு மதுவில் பொறிவண் டுழலும்
ஆவடு துறையில் பொன்னா யிரமே;
கண்டது உறியொடு பீலி யொருகையிற் கொள்ளும்
பறிதலைச் சமணர் பல்கழு மிசையே;
நீத்தது, அவிழ்ச்சுவை யேயறிந் தரனடி பரவும்
தமிழ்ச்சுவை யறியாத் தம்பங் களையே;
நினைந்தது, அள்ளல் பழனக் கொள்ளம் பூதூர்
இக்கரை ஓடம் அக்கரைச் செலவே; மிக்கவர்
ஊனசம்பந்தம் அறுத்து உயக் கொள்ள வல்ல
ஞானசம்பந்தன் இஞ் ஞாலத் திடையே.

ஞானசம்பந்தரின் செயல்களுட் சிற்சிலவற்றைத் திருவந்தாதியில்,

"அடைத்தது மாமறைக் காடர்தம் கோயிற் கதவினை, யன்று
உடைத்தது பாணன்தன் யாழின் ஒலியை; உரகவிடம்
துடைத்தது; தோணிபுரத்துக் கிறைவன் சுடரொளிவாய்ப்
படைத்தது தண்மையை நள்ளாற்றரசு பணித்திடவே",

என்றும், திருக்கலம்பகத்தில்,

"பண்டமுது செய்தது உமை நங்கையருள்
மேவு சிவ ஞானம்;
பைந்தருள நன்சிவிகை செம்பொன் அணி
நீடுகிற தாளம்,
கொண்டது........"

என்றும் ஓதுகின்றார்.

இவற்றுள் சில செய்திகளையே நம்பியாண்டார் நம்பிகள் பல விடங்களில் பல படியாகப் பாராட்டுகின்றார். இவற்றுள் முன்னணியில் நிற்பது சம்பந்தர் ஞானப்பால் உண்டதாகும். இதனை மட்டில் சுமார் ஐந்தாறு இடங்களில் பாராட்டிப் பேசுகின்றார். ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையின்கண் ஞானமுண்ட திறத்தை இனிமையுற விரித்துக் கூறலுற்று,

"பூவார் திருநுதல்மேல் பொற்கட்டி இட்டொளிரக்
கோவாக் குதலை சிலம்பரற்ற—ஓவாது

அழுவான் பசித்தான் என்று ஆங்கு இறைவன் காட்டத்
தொழுவான், துயர் தீர்க்கும் தோகை—வழுவாமே
முப்பத் திரண்டறமும் செய்தாள் முதிராத
செப்பொத்த கொங்கைத் திருநுதலி—அப்பன்
அருளாலே ஊட்டுதலும் அப்பொழுதே ஞானத்
திரளாகி முன்னின்ற செம்மல்'',

என்று கூறுகின்றார்.

உலகவாழ்வில் ஈடுபட்டு இன்ப துன்பங்களால் மலம் நீங்குதற்குரிய பக்குவமுற்று இறைவன் திருவருட்பேற்றுக்கு இலக்காவது உயிர்த்தொகைகட்கு இயல்பு. அவ்வாறின்றி, நம் சம்பந்தப்பெருமான் குழவிப் பருவத்திலேயே ஞானம் கைவரப்பெற்றது மிக மிக அரிய செயலாகும். அவ்வருமையால், பெரியரும் அரியருமாய் விளங்கும் அவரது பெருந்தகைமை அறிந்து வழிபடுவதும் அரிதாக இருக்க, எனக்கு அது எளிதாக வந்துவிட்டது என்று மகிழ்ச்சி சிறக்கும் நம்பிகள், திருவந்தாதியில்,

"எளிவந்தவா எழில்பூவரை கொண்மணித் தார்அழுங்கத்
துளிவந்த கண்பிசைந தேங்கலும் எங்கள் அரன்துணையாம்
கிளிவந்த சொல்லி பொற்கிண்ணத்தில் ஞானவமிர்தளித்த
அளிவந்த பூங்குஞ்சி இன்சொல் சிறுக்கன்றன் ஆரருளே''

என்றும், திருச்சண்பை விருத்தத்தில்

"கொங்கு தங்குங்குஞ்சி கூடாப்பருவத்துக் குன்றவில்லி
பங்குதங்கும் மங்கை தன்னருள் பெற்றவன் பைம்புணரிப்
பொங்குவங்கப் புனல் சேர்த்த புதுமணற் புன்னையின்கீழ்ச்
சங்கு தங்கும் வயல் சண்பையர் காவலன் சம்பந்தனே''

என்றும் பாராட்டியுரைக்கின்றார்.

பட்டினத்தடிகள், ஞானசம்பந்தப் பெருமானது இச்செயலையே வியந்து, தாம் பாடிய திருக்கழுமல மும்மணிக்கோவையில்,

"தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னையோ என்று அழைப்ப முன்னின்று
ஞானபோகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திரளை யவன்வயின் அருள,
அந்தணன் முனிந்து தந்தார் யார் என
அவனைக் காட்டுவன், அப்ப, வானார்
தோஓடுடைய செவியன் என்றும்
பீஇடுடைய பெம்மான் என்றும்
கையிற் சுட்டிக்காட்ட
ஐய நீ வெளிப்பட்டருளினை யாங்கே''

என்று உரைக்கின்றார்.

இவ்வண்ணமே சம்பந்தர் கோலக்காவில் தாளம்பெற்ற செய்தியைப் பாராட்டியுரைப்பவர், அவர் திருவாயால் பாட்டிசைப்பக்கையால் தாளம்போடுவது கண்ட பரமன், அவர் கைநொந்திடுமென்று

பொற்றாளம் தந்தார் என்று கூறுகின்றார். நம்பியாரூரர், "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன் தாளமீந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளன்" என்று அருளியிருப்பது நாம் அனைவரும் தெரிந்த செய்தி, இவர் கூறுவதைக் காண்மின் :

"கண்ணார் திருநுதலான் கோலக்காவிற் கரநொடியால்
பண்ணார் தரப்பாடு சண்பையர்கோன் பாணி நொந்திடுமென்று
எண்ணார் எழுத்தஞ்சும் இட்ட பொற்றாளங்கள் ஈயக்கண்டும்
மண்ணார் சிலர் சண்பைநாதனை யேத்தார் வருந்துவதே,"

என்று பாடுகின்றார். முத்துச் சிவிகை பெற்ற செய்தியும், ஆவடுதுறையுள் பொன் ஆயிரம் பெற்றதும் பரவப்படுகின்றன.

திருமருகலில் கணவன் விடநீண்டியதால் இறந்துபடக் கண்டு வருந்திய வணிகமகள்பொருட்டு நம் சம்பந்தர் அவ்விடம் தீர்த்து அவள் வருத்தம் போக்கிய செய்தி நம்பியாண்டார்நம்பிகளால் பலவிடங்களில் பாராட்டப்படுகிறது.

"வயலார் மருகல் பதிதன்னில் வாளரவால் கடியுண்டு
அயலா விழுந்த அவனுக் கிரங்கி அறிவழிந்த
கயலார் கருங்கண்ணி தன்துயர் தீர்த்த கருணைவெள்ளப்
புயலார் தருகையினன் என்னத் தோன்றும் புண்ணியமே"

என்று திருவந்தாதியும்,

"குவளைக்கருங்கண் கொடியிடை துன்பம் தவிர அன்று
துவளத் தொடுவிடம் தீர்த்த தமிழின் துறை செய்தவன்
திவளக் கொடிக்குன்ற மாளிகைச் சென்னியின்வாய்த்
தவளப் பிறைதங்கு சண்பையர் காவலன் சம்பந்தனே"

என்று திருச்சண்பை விருத்தமும் சிறப்பித்துக் கூறுகின்றன.

திருவுலாமாலையில் இச்செய்தியை வேறொரு வகையால் விதந்து பரவுகின்றார். நம் ஞானசம்பந்தப் பெருந்தகை திருவீதி உலா வருகின்றார். இவர் நலம் கண்டு மகளிர் சிலர் கருததிழந்து மெலிந்து தம்முட் சொல்லாடுகின்றனர். அமணரை வாதில்வென்று கழுவேற்றிய இவன் தன் மாலையை நமக்குத் தருவான் என்று நாம் கருதுவது பேதைமை என்ற கருத்துப்பட,

—"நங்கைமீர்,
இன்றிவன் நல்குமேல் எண்பெருங் குன்றத்தில்
அன்றமணர் கூட்டத்தை ஆசழித்துப்—பொன்ற
உரைகெழுவு செந்தமிழ்ப்பா வொன்றினுல் வென்றி
நிரைகழுமேல் உய்த்தானை நேர்ந்து—விரைமலர்த்தார்
பெற்றிடலாம் என்றிருந்த நம்மிலும் பேதையர்கள்
மற்றுளரோ என்று வகுத்துரைப்பார்"

ஆயினர். அதுகேட்ட வேறுசிலர், அவரை மறுத்து, சம்பந்தப்பெருந்தகை இரக்கம் மிகவுடையர் என்று சாதிப்பாராய், மருகல் விடம் தீர்த்த செய்தியை எடுத்து,

—"மற்றிவனே
பெண்ணிரக்கம் அன்றே, பிறைநுதலீர், மாகணத்தின்
நண்ணு கடுவிடத்தால் நாட்சென்று—விண்ணுற்ற
ஆருயிரை மீட்டன்று அவனை அணிமருகல்
ஊரறிய வைத்தது எனவுரைப்பார்."

இவ்வாறே, நம் சம்பந்தப்பெருமான் திருமயிலையில் என்பைப் பெண்ணாக்கிய அருட்செயலைத் திருவருணைக் கலம்பகமுடையார் மிக்க நயமுறக் கூறிப் பாராட்டுகின்றார். ஒத்த அன்பால் பிணிக்கப்பட்ட ஒருவனும் ஒருத்தியும் இல்லிருந்து நல்லறம் புரிந்து வருகின்றனர். வருங்கால், அவனுக்குத் தன் கல்வியறிவைப் பெருக்கிக்கொள்வதற்கு வேட்கை மிகுகின்றது. நல்லாசிரியர் ஒருவர் சேய்மையில் இருப்பதை அறிகின்றான். அவர்பாற் செல்லவும் விரும்புகின்றான். கல்வி குறித்துப் பிரியக்கருதும் கருத்தைத் தன் மனைக்கிழத்திக்குத் தெரிவிக்கின்றான். அவள் சீரிய கூரிய அறிவுநலம் படைத்தவள். ஆதலால், அவள் அவனை நோக்கி,

"ஆரும் விரும்பிய கல்விமேல் ஆசையுமக்குளதாயிடின்
பாருள வென்பொருபாவையாப் பாடிய பாவலர் போலவே
நீரு மருந்தமிழ் செப்பிடும் நீர்மையறிந்திவணேகுவீர்
மேரு நெடுஞ்சிலையத்தனூர் வீறருணாபுரி வெற்பரே" (செய். 20)

என்று கூறுபவள், தன் பிரிவாற்றாமையும், ஆற்றாது உயிர் நீங்கிய வழி மீட்டும் அதனை வருவித்துப் பொருந்துவிக்கும் அருட்கவி வேண்டும் என்பதை வற்புறுத்தலும், ஞானசம்பந்தர் என்பைப் பெண்ணாக்கிய நலமும் தோன்ற "என்பொருபாவையாப் பாடிய பாவலர் போலவே நீரும் அருந்தமிழ் செப்பிடும் நீர்மை யறிந்திவண் ஏகுவீர்" என்று உரைக்கின்றாள்.)

இனி, நம் ஞானசம்பந்தப் பெருந்தகை பாடியருளிய திருப்பதிகம் 16000 என்று நம்பியாண்டார் நம்பிகள் குறிக்கின்றார்கள். ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்,

"நகரம்கெடப் பண்டுதிண்தேர் மிசைநின்று நான்மறைகள்
பகரங் கழலவனைப் பதினாறாயிரம் பதிகம்
மகரம்கிளர் கடல்வையம் துயர்கெட வாய்மொழிந்த
நிகரங்கிலி கலிக்காழிப் பிரான்என்பர் நீணிலத்தே"

என்று ஓதுகின்றார். இக்கருத்தே, திருத்தொகையில்,

"—மொய்த்தொளிசேர்
கொச்சைச் சதுரந்தன் கோமானைத் தான்செய்த
பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா
வித்துப் பொருளை விளக்க வலபெருமான்"

என்றும், திருவுலாமாலையில்,

"பன்னு தமிழ்ப் பதினாறாயிரம் நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும்—முன்னிய
சிந்தனையால் சீரார் கவுணியர்க்கோர் சேய்என்ன
வந்தங் கவதரித்த வள்ளல்"

என்றும் எடுத்தோதி வற்புறுத்துகின்றார்.

இப்பதிகங்களின் வகைகளையும் தம்முடைய பிரபந்தங்களில் நம்பிகள் காட்டியிருக்கின்றார். இசைக்குரிய பண்முறையே வரும் பதிகங்களைப் பதிகமென்றும், திருப்பாசுரத்தைப் பாசுரம பல்பத்து என்றும், ஏனைச் சிறப்புடைய இயல்பமைந்தவற்றை திருவிராகம், திருவிருக்குக்குறள், யாழ்மூரி, சக்கரமாற்று, ஈரடி, முக்கால், என்றும் விரித்துரைக்கின்றார். திருவுலாமாலையில்,

" எப்பொழுதும்
நீக்கரிய இன்பத் திராக மிருக்குக்குறள்
நோக்கரிய பாசுரம்பல் பத்தோடும்—ஆக்கரிய
யாழ்மூரி சக்கரமாற் றீரடி முக்காலும்
பாழிமையால் பாரகததோர் தாம்உய்ய—ஊழி
உரைப்பமரும் பல்புகழால் ஓங்க வுமைகோனைத்
திருப்பதிகம பாடவல்ல சேயை"

என்று உரைப்பது காண்க.

இனி, ஞானசம்பந்தர் தம்முடைய திருப்பதிகத்துள் பாராட்டிய சைவப்பெருமக்கள் இவர் என்றும், அவர்களை இவ்விவ்வகையில் பாராட்டியிருக்கின்றார் என்றும் நமபியாண்டார் நம்பிகள் ஆராய்ந்து கூறுகின்றார். இப்பெருமக்களுள் ஞானசம்பந்தரை நினைக்கும்போதே பாண்டிமாதேவியார் தாம் நம் மனக்கண்ணே முந்து நிற்பவர். நம்பிகளும் அம்முறையே திருத்தொகையின்கண்,

"பத்திச் சிவமென்று பாண்டிமா தேவியொடும்
கொற்றக் கதிர்வேல் குலச்சிறையும் கொண்டாடும்
அற்றைப் பொழுதத்து அமணரிடு வெந்தீயைப்
பற்றிச் சுடுகபோய்ப் பாண்டியனை என்னவலான்"

என்றும், முருகநாயனர், திருநீலநக்க நாயனர் என்ற இவர் தம் சிறப்பை,

"வர்த்தமானீசர் கழல் வணங்கி வாழ்முருகன்
பத்தியை ஈசன் பதிகத்தே காட்டினன்;
அத்தன் திருநீல நக்கறகும் அன்புடையான்"

என்றும் உரைக்கின்றார். திருவந்தாதியில்,

"ஏந்தும் உலகுறுவீர் எழில்நீல நக்கற்கும் இன்பப்
பூந்தண் புகலூர் முருகற்கும் தோழனைப் போக மார்பைக்
காந்தும் கனலில் குளிர்படுத்துக் கடற் கூடலின்வாய்
வேந்தின் துயர் தவிர்த்தானை யெப்போதும் விரும்புமினே"

என்று தொகுத்தோதுகின்றார்.

இங்ஙனம், ஞானசம்பந்தரால் பாராட்டப்பட்ட பெருமக்களை நம்பிகள் எடுத்தோதி வந்தாரே; அவரால் திருச்செங்காட்டாங்குடிப் பதிகத்துள் பாசுரந்தோறும் பாராட்டப்பெற்ற சிறுத்தொண்டரைப் பாடிற்றிலரே என்று நினைக்கலாம். அச்சிறுத்தொண்டற்கு நம் ஞானசம்பந்தர் ஒரு திருப்பதிகம் முழுதும் அமைத்த அமைதி நலத்தை நன்கு ஆராய்ந்து ஒரு சிறந்த கருத்தினை நாம் அறிந்தொழுகுமாறு

நம்பியாண்டார் நவில்கின்றார். திருஞானசம்பந்தப் பெருந்தகையின் திருவருள்பெற வேண்டுவோர் சிறுத்தொண்டர் சிறப்பறிந்து பரவுதல் வேண்டும் என்பார்.

"விரும்பும் புதல்வனை மெய்யரிந்தாக்கிய இன்னமிர்தம்
அரும்பும் புனற்சடையா யுண்டருள் என்றடிபணிந்த
இரும்பின் சுடர்க்களிற்றான் சிறுத்தொண்டனை ஏத்துதிரேல்
கரும்பின் மலர்த் தமிழாகரன் பாதம் தொடர்வெளிதே,"

என்று பரிந்தோதுகின்றார்.

சுட்டுணர்வுக்கெட்டாத முதல்வனை நம் ஞானசம்பந்தப் பெருமான் சுட்டிக்காட்டிய திறத்தை வியந்த பட்டினத்தார், "தோடுடைய செவியன் என்றும், பீடுடைய பெம்மான் என்றும் கையாற் சுட்டிக்காட்ட" என்றாரன்றே; அதனையே நம்பியாண்டார் நம்பிகள் வேறொரு திறத்தால் நமக்கு உரைப்பாராய்,

"வாட்டுவர் தத்தம் துயரை வன்கேழலின் பின்பு சென்று
வேட்டுவர் கோலத்து வேதத்தலைவனை மெல்விரலால்
தோட்டியல் காதன் இவன் என்று தாதைக்குச் சூழ்விசும்பில்
காட்டிய கன்றின் கழல் திறமானவை கற்றவரே"

என்று உரைக்கின்றார்.

இனி, ஞானசம்பந்தர் பாடியருளிய திருப்பதிகங்களின் பொதுக் கருத்தும் அவற்றால் மக்கட்குண்டான பயனும் சிற்சில இடங்களில் நம்பியாண்டார் நம்பிகள் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோல்தோணி கண்டீர்—நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்

என்பதனால், திருப்பதிகங்கள் பிறவிக்கடலை நீந்தற்குத் துணைசெய்யும் என்று உணர்த்துபவர், திருக்கலம்பகத்தில்,

"பெறுபயன் மிகப்புவியுள் அருளுவன
பிற்றைமுறை பெருநெறி யளிப்பனபல்
பிறவியை ஒழிச்சுவன உறுதுயரழிப்பன"

என்று மீட்டும் வற்புறுத்துகின்றார்.

இத்திருப்பதிகங்கள் முற்கூறியவாறு பிறவிப்பிணி கெடுத்தற்குப் பெருந்துணையாம் என்பதை,

"அந்தம் உந்தும் பிறவித்துயர்தீர அரனடிக்கே
பந்த முந்துந் தமிழ் செய்த பராபரன்"

என்று சண்பை விருத்தத்தில் வலியுறுத்தி, இவை பத்திநெறியை மக்கட்கு உணர்த்தி, அதுவே சிவனருளைப் பெறுதற்கு நேரிய பெருவழியாம் என்று பல பாசுரங்களால் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

(தொடரும்.)

ஒழுக்கமும் விழுப்பமும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L., தஞ்சை.

'வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்வும் நெடுமையுஞ் செய்யும்பொருள'

என ஆசிரியர் தொல்காப்பியனுர் உரியியலில் உணர்த்திச் செல்லும் ஒட்ப வகையினுன், இணைந்தமைந்து இனிதாக உலகம் ஒப்பிய அற நெறியின்கண் நேர்ந்து நிரவிச் செல்லலே ஒழுக்க முடைமையாகு மென்பது தேறப்படும். அன்பு, அறன் ஆகியவற்றின் விளக்கம் நன்னடை யாதலான், யாவரிடத்தும் பாடறிந் தொழுகும் நேர்மை பண்பு அன்பென்பதூஉம், உலகில் நெடுமைப்பொருளாய்த்தொடர்ந்து பரந்து நிலைபெறுவது அறனென்பதூஉம் மெய்ம்மையாகும். அன்பும் அறனுமுடைமையே இல்வாழ்க்கைக்குரிய நற்பண்பாதலால், அப் பண்பின் முடிபயனுய் இயல்புடன் சிறப்பாக வழங்குவது அறமென் னும் துறவறமே யாகும். கள்ள மனத்துறவைவிட்டு, இல்லறத்தின் வழிநின்று மனத்துக்கண் மாசிலா தொழுகலே துறவறமென்பது ஈண்டுணர்ந்து உளங்கொளற்பாற்று. எனவே வாழ்விற் கேற்ற வனப்பு மாட்சிமையினை, அன்பும்அறனும் தருதலான், பாய்மாவனைய உள்ளத்தை யடக்கி, ஒழுக்கத்தால் உயிரினை ஒளிபெறச் செய்தல் மாந்தர்க்குரிய கடமையாகுமென்க.

காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்க நிலையினை விழுப்பொருளாகக் கருதிய முதுதமிழ்ச் சான்ரேர், வாழ்க்கை, இச்சை செயலறிவால் நோக்கப் படுமெனக் கொண்டு, அகவொழுக்க மாகிய இன்பத்தை அகமெனவும், புறவொழுக்கமாகிய அறத்தையும் பொருளையும், புறமெனவும் துறைவகுத்து, அறம்பொருளின்ப வாழ் வின் அடைவால் விளையும் விழுமிய பரிசில் வீடென்றும் நிறீஇயின வகை, தமிழர்தம் வாழ்வின் பயனையும், ஒழுக்க நிலையையும், விழுப்ப நோக்கையும் வலியுறுத்தி நுண்ணிதிற் றெரிக்கும் தன்மை வாய்ந்தது. அகம் புறமாகிய ஒழுக்கங்கள், பண்டே தமிழகத்தில், நாளும் உயிர்ப் புடனேங்கி விளங்கி, உய்வகை யுணர்த்துஞ் செய்யுள் வழக்கினை வன்மை மேவ அடைந்து உலகியல் வழக்காய், தமிழ் மரபு வழுவா நெறியில் இயங்கி நிலைபெறலான், அகம்புறமெனும் முறைபற்றி யுரைக்கப்படும் பொருட் பகுதி நிறைந்துள்ள சங்கத்து நறுந் தமிழ்ப் பாடல்கள் யாவும் விழுத்தகை உண்மைகளைக் கொண்டு மிளிர்ந்து, கற்போர்க்கு மாருது மகிழ்வூட்டும் முகத்தால், அறப் பழங்காலத்தே, தமிழ்ச் சான்ரேர், நல்லொழுக்கா லெய்திய விழுமிய தன்மை விளங் கப் புலனுதல் காணப்படும். எனவே, வாழ்க்கைச் செயல் யாவும் அகம்புற மென்றிருவகை யானே, திணைதுறைகளா யடங்கப் புலமைக் கலையொடு வகுத்துரைத்தல் தமிழர் கண்ட மரபாகுமென்பது ஒருங் கினிது விளங்கா நிற்கும்.

யார் மாட்டும் இணைந்தமைந் தொழுகும் அருநடை நலனும் இல் வாழ்க்கைப் பண்பினை விதி முகத்தால் இறுத்துக் கூறவிரும்பிய மெய்

யுணர்வினரான ஆசிரியர் திருவள்ளுவர் இல்லறவியலில் 'ஒழுக்க முடைமை' எனும் தனி அதிகாரம நிறீஇ, அவ்வொழுக்கப் பகுதியின் இறுதியின் கண்ணும் 'ஒட்ட வொழுகலே' விதித்து நிறுத்திய இய லமைப்பைக் காணுங்கால், ஒழுக்கமுடைமையே உயிர்க்குரிய நிலைக் களனென்றும், அஃதே இல்லறத்திற்குரிய பழகுநெறி யென்றும் தெளியப்படும். ஒழுக்கத்தின் எய்தும் மேன்மை பிற எவையானும் எய்துதற்குரிய தன்ருதலான், ஒழுக்கத்தை உயிரைவிடச் சிறந்ததாக காக்கப்படுதற் குரியதென வுணர்ந்தாரே ஒழுக்கமுடையார். இத் தகைய உள்ளுணர்வுடையார் உணர்வே ஒழுக்கத்திற்குரிய அடிப் படையெனவும், உணர்வு உடலால் நிலைபெறுகின்றதெனவும்கொண்டு தம்முடலை உணர்வின் பொருட்டு வேண்டுவரென்பது கண்கூடு. கூர்ந்து சிந்திக்கப்புகின், முதற்கண், ஒழுக்கம் உணர்வால் பாது காக்கப் படுகின்றது. அதன் பின்னரே, ஒழுக்கம், அவ்வுணர்வையும் உடம்பையும் காத்து, சிறப்புடையதாக்குகின்றது. மற்றும் அஃது வீடு பெறுதற்குரிய சிறப்புடைய உயிர்க்கு விழுப்பமும் தந்து அதனை எக்காலும் காக்கும் தகைமை யுடையதாய் வயங்குகிறது. ஆயினும் வீடு பேற்றினைப் பெறுதற்கு ஒழுக்கம் விழுத்துணையாகலின், அஃது சிறப்புடைய உயிரினுஞ் சிறப்புடைத்தென்பது விளங்கா நிற்கும். இதனுனே, எந்நிலைக்கண் நின்ருர்க்கும், ஒழுக்கம் விழுப்பந் தரலால் அதனைப்பரிந்து, பேணி, காக்கக் கடவதென்றும், அஃதே துணையென்றும் தேற்றமும் ஏகாரமும் கொண்டு வள்ளுவர்

"பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை"

என அழுத்தந் திருத்தமாக எச்சவும்மை வருவித்துணரும்படி சுட்டிக் கூறுவாராயினர்.

பெரு நாவலராம் திருவள்ளுவர், இவ்வாறெல்லாம் ஒழுக்கமுடை மையின் சிறப்பினை அருமைப்பாடு தோன்றக் கூறியபின்னர், மீண்டும் அதனையே ["ஒழுக்கமுடைமை குடிமையிழுக்க, மிழிந்த பிறப்பாய் விடும்"] உயர்வு, ['அழுக் காறுடையான்க ணாக்கம் போன்றில்லை, யொழுக்க மிலான்க ணுயர்வு'], மேன்மை [ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி, னெய்துவ ரெய்தாப் பழி], நன்றி ['நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க, மென்று மிடும்பை தரும்], என பற்பல வகையான் விதந்து விளக்கி, பெரிதும், தம் மெய்யறிவு, மெய் யின்பத் தழைவினைப் புலப்படுத்தும்மாண்பும் போற்றற்பாலது. ஒழுக் கம் உயர்குலத்தினன்றெனும் உண்மையினைக் கடைப்பிடித்து ஒழுக்க முடைமையே குலநலனுடைமையெனவும், குலநலமுடையார் குன்றுவ செய்யாரென்றும் 'ஒழுக்கமும் வாய்மையு நாணு மிம் மூன்று, மிழுக் கார் குடிப் பிறந்தார்' எனவும் வள்ளுவர் வற்புறுத்தி, சொல்லானும் செயலானும் ஒழுக்கம் புலப்படுதலான், தீய வழுக்கியும் வாயாற் சொலல் ஒழுக்க முடையார்க்கு இயலாதெனவும், சொல்லறங்காத்து நேர்மைப் பண்புடன் இன்சொல் வழங்கும் இயல்பினை யுடையாரே ஒழுக்க முடையா ரெனவும், வாய்ப்பு வந்த அமயத்தே வலியுறுத்தும்

வகையினுன் மெய்ம்மை புலப்படுதலால், மக்கள் உயர்வுக்கு ஒழுக்க மொன்றே விழுத துணையெனத் திகழ்தல் ஒருதலையா மென்க. யாவருக்கும் இன்றியமையாத அடிப்படையான தண்ணென்ற கடைப் பிடியாகிய இவ்வொழுக்க நடை, இடையில் இழுக்காது கடைபோக தொடர்ந் தொழுகும் பெற்றிமையை வற்புறுத்துவான்வேண்டி,

'தீயொழுக்கம் என்று மிடும்பைதரும்'
'வழுக் கியும் வாயாற் சொலல்'
'ஒழுக் கத்தின் ஒல்கார் உரவோர்'
'இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்'
'இழுக்கத்தின் ஏதம் படுபாக் கறிந்து'
'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி'

என, பொய்யில புலவர் பல்வகையானே கிளந்தெடுத்து நுவலும் நீர்மை ஈண்டுப் பெரிதும் நினைவு கூறற்பாலது.

வையத்தே துன்பத்தினை விரும்புவார் ஒருவருமில ராதலான், இன்பம் விழைவார் யாவரும், முற்பட உயர்ந்தாரொடு பொருந்த, நல்லொழுக்கம் ஒன்றினையே நாடவேண்டுதல் இன்றியமையாததென, உணர்வுடை மாந்தருக்கு விழிப்புறுத்துவான்வேண்டி, வள்ளுவப் பெருந்தகை, ஒழுக்கத்தை நல்லொழுக்கம், தீயொழுக்கம் என இரு வகையாகப் பாகுபடுத்தி யருளினர். மற்றும உயர்விழந்து இழிதக நிலையினி லிறுத்தும தீயொழுககம மறத்திற்கும், நன்றிக்கு வித்தாகி விழுமியது பயக்கும நல்லொழுக்கம் அறததிற்கும் காரணமா யமைந்ததை, 'நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க, மென்று மிடும்பை தரும்' என்ற வெணகுறட்பாவில் திருவள்ளுவர் திட்ப நுட்பமாய் விதந்தோதிய மென்மை, தீதொரீஇ நன்றின்பா லுய்க்கும் அறிவு நெறியின் உண்மை நலனையும் மாட்சியையும் மெய்ப்பிக்கும். இஃதோடமையாது தீயொழுக்கமுடையான் உயர்விலான் எனபதைப் புலப்படுத்தத் தீயதுபயக்கும் அழுக்காற் றியல்புடையானை ஒழுக்க மிலானுக்கு உவமையாக்கி, 'அழுக்கா றுடையான்க ணாக்கம் போன் றில்லை, யொழுக்க மிலான்க ணுயர்வு' எனவள்ளுவர் அவ்வுவமையை உணர்த்துதற் குரிய சொல்லெல்லாம் பெய்துவைத்து மிக்க பொருண் மைதோன்ற அருளியது கருதுதற்கினிய அரிய குறிப்பாகும். ஒழுக்காறும அழுக்காறிலாது செவ்விதிற் செலல் வேண்டுமென்பதூஉம இவண் அறியக்கிடப்பதொன்றாம்.

எத்தகையோர் மாட்டுந் தீதின்றியும், பண்பொடு உரனென்ற கடைப்பிடியுங்கொண்டு, சீரிதாகவும் நேரிதாகவும் இனிதொழுகுவதான நடையொழுக்கம் கல்வியிலும் வலிதானதென்று பெரிதும் நயப்பாடு தோன்றும்படி, வள்ளுவர் 'உலகத்தோடொட்ட வொழுகல் பல கற்றுங், கல்லா ரறிவிலாதார்' என்ற குறளில் பெற வைததத னுன் உலகமென்பது ஏந்திய கொள்கையுடைய ஒழுக்கமுடை யாரென் பதூஉம், ஒழுக்கமுடைமை அறிவுடைமையாயிற்றென்பதூஉம் அறியப்படும் 'எவ்வ துறைவதுலக முலகத்தோ, டவ்வ துறைவ தறிவு' எனப்படுதலான் அறிவுக்குப் பயன் ஒழுக்கமாதலும் ஒருவாறு துணியப்படும். மற்றும் அறிவுடையாரெல்லா முடையாராதலான், ஒழுக்கங்

குறையாராயஅறிவுடையார் திருவுடையாரென்பதூஉம் பெறப்படும். எனவே இழுக்கின்றி இனிதொழுகிப் பெறும் வீடு பேறு இத்திருவுடையார் பெறுதலுமியலும்.

திருவென்பது கண்டாரான் விரும்பப்படும் தன்மையாதலான், நல்லொழுக்க முடையாரே திருவுடையார். வீடு பேறளிக்கும் ஒளியுமுடையாராவர். இவ்வொளி உள்ளத்தில் அன்பும், அறிவில் புலமையும் ஒழுக்க நடையில் தூய்மையும் மலரச் செய்யும், இன்னவர் தம்மைச் சூழ்ந்து இணங்கொழுகுதலான் மேன்மையுடையார்ஒழுக்கத்தினுயர்வினுண்மை யுணர்ந்தாராதலான், ஞான யோக நெறிகாணும் விழுத்தகை நல்லாரென வழங்கப்படுவர். ஞான விழுப்பொருளாய விழுமிய முடிநிலைப்பேற்றினை ஒழுக்கம் தருதலான் வள்ளுவர் 'ஒழுக்கமுடைமை' எனுமதிகாரத்தில் முதற்கண்ணேயே ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்ததென்றும், உயிர்க்குறு துணையாவது ஒழுக்கமே யென்றும், அஃது காக்கக்கடவதென்றும் காரண காரியங்கண்டு வீடென்னும் பொருண்மையினைத் துணைப்பொருளாக அடக்கி,

> ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
> முயிரினு மோம்பப்படும்.
> பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
> தேரினு மஃதே துணை.

எனக் கற்பார் நெஞ்சத்துட் பதியுமாறு யாப்புறுத் தருள்வாராயினர்.

வாழ்வின் நற்பயனென, முற்பட உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட அற முதலாய பொருள் நான்கனுள் வீடு பேறே சிறந்தது. வீடு பெறுதற்குரியது உயிராதலான், மக்களுயிர் அறத்தோடாற்றின் ஒழுகியல்லது வீடு சேர்தல் இயலாது. வீடுபேறு, இல்லற மெனும் ஒழுக்கத்தை முறைப்படி மேற்கொண்டியற்றும் இல்லறத்தானுக்கும் கிட்டுமென்பதூஉம்

> 'அறத் தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
> போ ஒய்ப் பெறுவதெவன்'

என்ற மணிக் குறளான் பெறப்படும். அறனிழுக்கா இல்லறமெனும் அருளொழுக்கத்துத் தெளிவே விழுப்பமென்பது, தவப்பேறுடைய ஞான திருவள்ளுவர் 'நீத்தார் பெருமை' எனும் அதிகாரத்தில் எடுத்த எடுப்பிலேயே 'ஒழுக்கத்து நீத்தார் பெருமை' என அறிவுறுத்தியமையான் விளங்கும். இல்லற நெறியின்கண் நின்று நுகரும் ஒழுக்கம் முடிவில் விழுச் செல்வ மெய்தி மற்றீண்டு வாரா நெறியில் படிவதால் அதன் தெளிவு, உரைகொண்டு மொழியலுறும்வரை நிலையுடைய தல்லவென்பது உற்றுணர்வாரெவருக்கும் தேற்றமாம்.

தவத்தாற் பெறக்கிடக்கும் வீடு பேற்றை உடலை வருத்தாதும் உலகின்பங்களைத் துறவாமலும் இல்லறமென்னும் ஒழுக்கமுடையான் எளிதே பெறுதலை தெய்வத் திருவள்ளுவர்,

> 'அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்
> தின்புற்ரு ரெய்துஞ் சிறப்பு'

என்ற குறள் வெண்பாவில் சுட்டிக் காட்டிய அருமை உரை வரம்

பரியா வியப்பினைத் தருவதாகின்றது. மற்றும் 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' யென்றதனுன், ஆய்ந்து அளவிடக்கூடாத சிறப்பினை, விழுச்சீருடைய இல்லற வொழுக்கத்திற் றலைப்பட்டார் பெறுவரென் பதூஉம் துணிபு.

"அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என, தெய்வத் தவமுதல்வராய ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறுவதி ஞன் பழகு நெறியாகிய இல்லறநெறியில் முறைப்பட வழா தொழுகு வோர்க்கே துறவற நெறியும் கைவந்து பயன் றருமென்னும் வாய்மை மலையிலக்கேயாமென்க. எனவே நாடாச் சிறப்பு வீடாதல் 'சிறப் பினுஞ் செல்வமுமினும்', சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு', என்ற திருகூறட் பகுதிகளுக்கு விளக்கங்கூறும் உரை களினுன் புலனும். 'சிறப்பும்', விழுப்பமும்' உயர்வகை ஒரு பொருட் சொற்களாயினும் அவை மறுமைச் சிறப்பாகிய ஞான நிலையினை உணர்த்தும் பெற்றிமை வாய்ந்தனவென்பது தொல்காப்பிய கால முதல் ('இழுமென் மொழியான் விழுமியது நுவலினும') வழக்கில் வந்திருத்தலானே அறியப்படும்.

இதுகாறுங் கூறிப் போந்தவாற்ருல் ஒழுக்கமென்பது எத்தகை யோர் மாட்டும் இணைந்தமைந்து இனிதே நீண்டு பழகும் அறிவு நெறி என்பதூம். அவ்வறிவு நெறி ஒழுக்க முறைபற்றி அகம் புறமென் றிருவகையாய் அறமுத ஞற்பொருட்டிறம் நலம்பட அமைந்ததென் பதூஉம், அன்பும் அறமும் விரவிய இல்லற நெறியின்பாற் பட்ட எளிது பழகுநெறியின் தெளிவே விழுப்பமென்பதூஉம், இல்லறமென் னும் ஒழுக்கம் பயக்கும் விழுப்பமாவது துறவறமென்பதூஉம, இல் வாழ்க்கையில் நின்று இன்புற்ருரெய்தும சிறப்பு இல்லறத்தோ டொட்டிய நெறியின் பயனென்பதூஉம், இல்லற துறவறங்கட்குப் பொதுப்பட அடிப்படையாக நிற்கும ஒழுக்கநிலை இல்லறப்பாங்கிற்கு உரியதாய் நின்று துறவறத்தின்கண் விழுப்பமெனும் முடிபொருட் பிழிவாய் அமையுஞ் சாலச் சிறப்பு வாய்ந்ததென்பதூஉம், மானிடப் பிறவியின் பயன், எடுத்த யாக்கையானே பிறிதொரு யாக்கையை எடுத்திடா வகை யறிதலால். அதனை

'ஒழுக்கம் விழுப்பந்தரலா லொழுக்க
முயிரினு மோம்பப் படும்'

என்ற தமிழரியல்புரைக்கும் குறட்பா எய்துவிக்கின்றமையான், அம் முழுமணிக்குறள், இருளகற்ற வந்த பரிதியின் தனியாழியன்ன குறளு லுக்கு ஓர் அச்சாணியாக அமைந்து இறவாத மங்கலத் தகுதி வாய்ந்துமக்களுயிரை வாழ்விக்கவல்லதென்பதூஉம் விளங்காநிற்கும்.

வயங்கு வளியின் வளாகம்.

திரு. த. பு. நவநீதகிருட்டினன் அவர்கள்,
இயற்கைப் பொருட்கலைப்பகுதித் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

நிலை பிறழாமல் நீலிருக்கலாம்; மென்காற்று வீசலாம்; வலமாதிர வளிகொட்பு கொடுஞ்செலவு கொண்டிருக்கலாம். இவ்வாறு, பல பான்மைகளுற்றபடி மாறிமாறித் தோன்றும் உலவை எங்கிருந்து உறுவது? எங்கு போவது? அஃது அடித்தற்கான பொருட்டு எதுவாம்? இன்னோரன்ன வினாக்களை நாம் கேட்டலைப்போலவே பண்டை மக்களும் கடாவினவரே. விடைதரும் முகத்தான் அஞ்ஞான்று புராணக் கதைகள் பல கூறப்பட்டன. அயோலஸ் (Aeolus) என்ற வங்கூழிறைவன் பலதிற வளிகளை சேயளையொன்றில் அடைத்து வைத்துக் கொண்டிருந்தானாம். தான் விரும்பினபோது தான் மேவின வகைகளிலாய் அவற்றின் கூறுகளை வெளிவிடுத்து வந்தானாம்? இஃது கிரேக்க புராணக்கதை. துணிகரச் செயலின் சிறந்த யூலிஸஸ் (Ulysses) என்ற வேந்தன், தன் நாவாய்ச் செலவின் போது வளி கொட்பு மிகையால் இடர்ப்படாதிருக்கும் பொருட்டு, அயோலஸை நயந்து, கொடுஞ் செலவு வளிகள் அனைத்தும் அடைத்து வைக்கப்பட்ட தோற்பை யொன்றைப் பெற்றான் என அந்நாட்டு பண்டைக் கதையொன்று கூறும். அவ்வாறான கையாறுகள் பல தொன்னாடுகள் பலவினும வழங்கி வந்தனவே. நம் நாட்டிலும், வளியிறைவன் இயம்பப்படும் சரிதைகளுக்கு பஞ்சமில்லை. நாவாயோடற்கென தக்க காற்றில்லாவிடின், கலத்து மாலுமிகள் அனைவரும் ஒருங்கே ஊதினால், வளி வீசுவதாகும், எனக் கப்பலோட்டிகள் பலர் நம்பிவந்தனர். வளியைக் குறித்தபடியான அத்திறபேதை நம்பிக்கைகள் இற்றையுலகிலும் ஆங்காங்காய் உலவுவனவே.

இயற்கை கடாவும் வினாக்களுக்கு விடை காண முயறலாலேயே, தெரியற் செய்கை (Science) யின் திரண்ட அறிவு விளைந்ததாம். அவ்வாறான வினாக்களில் மிகச் சிலவினுக்கே விடைகள் அறியப்பட்டுள; விடை காணாவாறாயான வினாக்களே பலவாம். 'காற்று எங்ஙனமாய்த் தோன்றினது?' என்ற வினாவுக்கு விடையறியார், தெரியற் செய்கையோர். ஆனால், அஃது அசையா நிலைகொண்டு ஊன்றினபடியேயில்லாமல், பல தருணங்களில் இயங்கற்கான பொருட்டுக்கள் எவை என்பதை அன்னா சிறிதுவரை தெரிந்திருப்பவர். 'காற்று' என்ற பொருள் நிறுத்தலளவை செய்யப்படவியன்றதொன்று எனவும், அஃது பொருண்மையினியலான 'ஆனாமைப்பற்று' (Inertia) என்ற தன்மை கொண்டிருப்பதே எனவும், ஆதலால், அதன் நிலையை மாற்ற வலிமை வேண்டப்பட்டதாகும் எனவும் தேற்றமாய் அறியப்பட்டுள்ளது. ஆகவே, காற்றானது தள்ளப்படலால், வயங்கு வளியுறுவதாகும் என, தெளிவாய்க் காணலாம். 'அங்ஙனமான தள்ளும் பொருட்டு எவ்வழியே அமைவதாகும்?' என வினவலாம். தெரியற்செய்கை தரும் விடை பின்வருமாறானது: உலகப் பரப்பு முழுதையும் கோலியுள்ள

காற்றுப்பரவை, எங்கணும் ஒரேவாருன திறமுற்றிலது; பகுதிக்குப் பகுதி, செறிவினளவு வேறுபடுவது வெப்பநிலை (Temperature) ஒரே படியாயிருக்கும் நிரலின் அமையாமையினுலேயே, செறிவுத் தகவினுன வேற்றுமைகள் தோன்றுவன. இவற்றையொட்டி, அமுக்க வேறுபாடுகள் (Pressure Differences) விளைவன. அவற்றின் தொடர்பாய், அமுக்கம் குறைந்த இடங்களை நோக்கி, அமுக்கம் மிகுந்த இடங்களினின்று காற்றுக் கூறுகள் இயங்குவன. தள்ளும் அமுக்கமானது வலியுறுத்தலால், காற்று இயக்கப்படுகிறது. வயங்குவளி அமுக்கமுறுத்துவதாகும். அஃதாவது அவ்வளி தன் செலவைக் குறுக்கிட்டவாருன தடுப்பை அழுத்துகிறது. இவ்வாருன விளைவைப்பற்றி அனைவரும் அறிவார். வயங்கும் பெருவளிகள் வன்மரங்களையும் முறித்தல் என்பது பொதுவான நிகழ்ச்சியே. புயற் காற்றினடிபட்நேர்ந்த எவரும் வயங்கு வளியினது அமுக்கவாற்றலின் உறைப்பை, தாம் நேரே உணர்ந்தவரே. அவ்வாருன அமுக்கம், சதுர அடிக்கு எத்தனையான பவுண்டுகள் என, அளவிடப்படுவது. அஃது வளியியக்கத்தினது விரைவினளவையும், காற்றுச் செறிவினளவையும் பொறுத்திருக்கும்.

வளிவயங்கத் துவங்கின வுடனேயே, இன்னெருவகையான விளைவினுன முடுக்கமும் தொடர்புற்றவாருயாகும். அஃது மிக முக்கியமானது; உலகச் சுழற்சியின் விளைவாய் எழுவது. இவ்வுலகு தனது ஆய நிலைப்புக்களை (Poles) ஊற்றமாய்க்கொண்டு இருபத்து நான்கு மணிப்பொழுதுக்கு ஒருமுறையாக, மேற்கினின்று கிழக்கானவழியே, சுழன்று வருவது என அனைவரும் அறிவார். அச்சுழற்சியின் பொருட்டாய், ஆயநிலைப்பிடங்களைத் தவிர்த்த உலகுளிகளான பிறபலவும் சுழன்று கொண்டிருப்பன; ஆயினும் அவை எல்லாம் ஒரேயளவான சுழலுவிரைவுடன் இயங்கா. ஒக்கற்சுட்டு வரியினுனவை (Equator) மணிக்கு ஆயிரம் மைலுக்கு சிறிது மிக்க விரைவுடன் சுழல்வன. 30° என்றகுறுக்கை விரித்தனையான பாங்கர்களில் அவ்விரைவினளவு மணிக்கு, தொளாயிரம் மைலுக்கு, சிறிது மிகுந்திருப்பது; 45° என்ற இடங்கள், ஏறக்குறைய மணிக்கு எழுநூற்றைம்பது மைல் விரைவுடன் சுழல்வன; 60° என்றவயின்கள், மணிக்கு, ஐந்நூறுமைலுக்கு சற்றுமிகைப்பட்ட விரைவுடன் சுலவுவன, 80°, என்ற பாங்கர்கள், மணிக்கு, நூற்றெண்பது மைல் விரைவுடனும், 85° என்ற இடங்கள் மணிக்கு தொண்ணூறு மைல் விரைவுடனும் சுழல்வன. ஆயநிலைப்புக்கள் சுழலா. இங்ஙனம் சுழலு விரைவினளவுகள், ஒக்கற் சுட்டு வரியினின்றுஆயநிலைப்புக்களுள்ளவட்டங்களில் தொலையாய்ச்செல்லச்செல்ல குறைந்துகொண்டே போவன. ஒவ்வொரு பாங்கரையொட்டிய காற்றுப் பகுதிகளும், முறையே, ஆங்காங்கான சுழற்சி விரைவினளவுகளைக் கொண்டனவாகவே யிருப்பன. இங்ஙனம், காற்று வெளியிலான பகுதிகள் தம்மிடையான விரைவினளவு வேற்றுமைகளின் பொருட்டாய், ஒன்றைப் பொறுத்து இன்னென்ருய்க் குட குண வாட்டத்திலான இயக்கமுடையவையாய்ஆவன. ஆதலால்,

ஒக்கற் சுட்டுவரியினின்று கிளம்பி, வடக்கேயும் தெற்கேயும் நோக்கி, செல்லும் வளிகள், நேராய் அத்திசைகளில் செல்லாமல், குணதிசை வாட்டமாய்க் கோணினவாறு செல்வன. சுழற்சிப் பொருட்டாயான இன்னொரு விளைவையும் கருதல், வேண்டும். நாமெல்லோரும் கவண் கயிற்றைச் சுழற்றி விளையாடினவரே. அவ்வாறு அதைச் சுழற்றும் போது, கயிற்றின் வழியே வலியுறுத்தப்படும் அடல்களான இரண்டிருப்பன. சுழற்சியின் விளைவாய், கயிற்றினது சுழலு நுனியினின்று கைவாட்டமாய் ஓரடலான்று உகைத்தப்படுவது ; அதையொட்டி, கயிறுதளர்ந்து உள்ளிழுக்கப்படாதபடிதடுத்து, அதை நீட்சியுற்றபடி வைத்துக் கொண்டுள்ளற்கான மற்றோரடல் நம் கையினின்று நுனி வாட்டமாய்ச் செலுத்தப்படுவது. அவையிரண்டும் ஒரேயளவினவாயிருப்பனவாதலால, கயிறு விறப்பா யிருப்பது. அவ்வாறான அடல்களுக்கு முறையே, 'நடுநாட்ட வலிமை', 'நடுவொருவு வலிமை' என்று பெயர். அவ்வாறான வலிமைகள், சுழற்சியினது விரைவினளவையும், சுழலு வட்டத்தினது ஆரையினளவையும் பொறுத்த வளவினவாயிருப்பன. உலகச் சுழற்சியை யொட்டி, பல குறுக்கை விரித்தனைகளிலமைந்த இடங்களில் அவ்விரு திறவளவுகளும் வேறுபடுவன. ஆதலால், அவ்விரு வலிமைகளினளவுகளும், அதை யொட்டி பல்லிடங்களில் வேறுபட்டிருப்பன. அவ்வழியேயும், ஆங்காங்கான காற்றுப் பகுதிகளின் இயக்கத் தகவுகள் வேறுபட்டனவாயமைவன. இவ்வாறாக உலகச் சுழற்சி வாயிலான பொருட்டுக்களேயன்றி, மலைகள், பள்ளத்தாக்குகள்,குன்றுகள்,குழிகள், பாறைகள், மரங்கள் உலகப் பரப்பிலான பலவகை மேடு பள்ளங்கள், இன்னோரன்னவும் வளிச்செலவின் போக்கை ஆளுவன். சுழல்களும், துயல்வரல்களும், சுருள்களும் நேர்ந்தவாறு, வளிகொட்பு இயங்குவதாகும். பெருஞ் சுழல்களில் சிறுவுழிகள் ஊர்வன ; பொங்கு துயல்வரல்களிடை நுண்ணலங்கல்கள் நிகழ்வன; வண்ணகமிக்கசுருள்களின் ஓரங்களில் தன்ன திருகைகள் தவழ்வன. வயங்குவளியின் கொட்புச் செலவை ஆராயப் புகுந்தோர், அதன் வளாகத்தில் மொய்ந்திருக்கும் பொருட்டுக்களின் திறமிகை கண்டு வெருண்டு போகவில்லை ; அவற்றைச் சலித்துத் தேற்றம் பெறும் நம்பிக்கையை இழந்தாரில்லை ; அறிவை நாடும் முயற்சியில் சலிப்புறவில்லை ; ஆராய்ச்சிமே லாராய்ச்சிகள் செய்துகொண்டே வருகின்றனர்.

தெரியற் செய்கையோர், சான்றாண்மையுடன், தம்மை எதிரிட்ட நிலைமையைத் திண்ணமூன்றின நேர்முகத்தினராய் நோக்கினர். மெய்யாகவே, அந்நிலைமை அழுங்கற்ற குவினதல்ல எனக் கண்டனர். வயங்கு வளியைப் பொறுத்த நுண்பொருட்டுக்களைச் சலித்தெடுத்து விட்டு, தங்கின பெரும்பொருட்டுக்களானவற்றை ஒவ்வொன்றாயான வாறு ஆய்ந்திடின், பொருட்டுலக்கம் காணல் எளிதே, என, அன்னார் துணிந்தனர். ஒரேயளவு உயரங்களிலான காற்றுப் பகுதிகளிடையில், வெப்பநிலை வீற்றங்களை யொட்டிய அமுக்க வேற்றுமைகளையும், உலகச் சுழற்சியையும் முக்கியமாய்ப் பொறுத்தபடியே வளிகளின் இயக்கம் விளைவதாகும் எனத் தெளிவாயிற்று. வெப்பநிலை வீற்றங்

களைப் பொறுத்து ஏற்படும் நிலைமை எப்படியிருப்பதாகும் என்பதைக் கருதலாம். ஒக்கற் சுட்டுவரிப் பாங்கர்களிலான காற்று இடையறாது சூடேற்றப்பட்டு வருவதாகும்; குறுக்கை விரித்தனை யேற்றமான இடங்களது காற்று, தொடர்வண்ணமாய்க் குளிர்வுறுவதாகும். ஆதலால் காற்று வெளியின் ஏர்பான நிலைகளில், ஒக்கற் சுட்டுவரிப் பாங்கர்களினின்று குறுக்கை விரித்தனை யேற்றமான பாங்கர்களை நோக்கியேகும், காற்றோட்டக் கால்கள் எழுவன; தாழ்ந்த படிகளில் குறுக்கை விரித்தனையேற்றமான இடங்களினின்று ஒக்கற் சுட்டுவரி வாட்டமாய்க் காற்றோட்டம் விளைவதாகும். ஆகவே, காற்றுப் பரவையின் மேற்பகுதிகளில் ஒக்கற்சுட்டுவரியினின்று தெற்கேயும் வடக்கேயுமாகவும், தென்புலத்தினின்றும் வடவகலுள்ளினின்றும், ஒக்கற் சுட்டுவரியின் வாட்டமாகவும், காற்றோட்டங்கள் ஏற்படுவன. உலகச் சுழற்சியைப் பொறுத்த விளைவை இனிக் கருதலாம்.

உலகச் சுழற்சி பாற்பட்ட நடுவொருவு வலிமை (Centrifugal Force) காற்றை மேலெழச் செய்யும் போக்கானது. ஒக்கற் சுட்டுவரிப்பாங்கரில் அவ்வலிமையினளவு மிக்கதானது; ஆயநிலைப்புக்களை நோக்கிப்போகப்போக, அதன் அளவு குறைத்துக்கொண்டேபோவது. ஆதலால் அவ்வாறான வலிமையை யொட்டிய விளைவு, காற்றை, வட-தென் வாட்டங்களில் செலுத்தும்படியாகவேயிருப்பது. அடுத்ததாகச் சுழலு விரைவினளவு வீற்றங்களை யொட்டிய விளைவுகளைக் கருதலாம். ஒக்கற் சுட்டுவரியை நோக்கிவரும் வளிகள் உலகப் பரப்பைச் சறுக்கினவாறு வயங்குவன; குளிர்ந்திருப்பன; சுழலுவிரைவினளவு குறைந்த இடங்களினின்று அவ்வாறான அளவு மிகுதியாகி வரும் களங்களை நோக்கிச் செல்வன. ஆகலின், அவை அடைகிற பாங்கர்களின் சுழலுவிரைவினளவுகளுக்குக் குறைந்த அளவினவான விரைவுகளுடன், ஆங்குப் போவன. எனவே, அவை கிளம்பினபோது அவற்றினுக்கு நேராயிருந்த இடங்களுக்குப் பின்றலான வைப்புக்களையே அடைவன. அதாவது அவை அடையும் பாங்கர்களின் வயங்கு திசைக்கு எதிர்முகமாய்ச் செல்லும்படியாயிருப்பன. சிறு எடுத்துக் காட்டொன்று கூறலாம்; விரைவினேகும் வல்லுய்த்துத் திகிரியொன்றில் (Motor Car) நாம் ஏறிப்போய்க் கொண்டுள்ளோம்; வழியில், மாட்டு வண்டியொன்றைக் கடந்து போகிறோம்; அவ் வண்டிக்காரன் நாம் அவன் வண்டிக்குமுன் செல்லலைப் பொறாது, அவ்வண்டியைக் கடக்கும் தருவாயில் நம் திகிரிப்புறமாய் தன் கைக் கோலை வீசியெறிகிறான்; அக்கோல் நம் திகிரியில் விழாமல், நம்மினின்று எதிர்வாட்டத்தில் பறந்துபோதலைப்போல, அதை நாம் காணுவோம். நம் திகிரியைத் தொடர்ந்து, இன்னும் பல திகிரிகள் வந்து கொண்டிருந்தவாறாயிருந்ததாயின், அங்ஙனம் வரும் ஒன்றில் அக் கோல் விழுவதாகும். அவ்வாறே ஆய நிலைப்புக்களினின்று ஒக்கற் சுட்டுவரியை நோக்கிச் செல்லும் வளிகள், அவை கிளம்பினபோது, அவ்வவற்றினுக்கு, முறையே நேராயிருந்த இடங்களை யடையாமல் ஆங்காங்கான குறுக்கை விரித்தனைப் பாங்கர்களுக்குப் பிறகிடலாய்ப்

போவன. உலகச்சுழற்சி, மேற்கினின்று கிழக்கு வாட்டமானது. ஆதலால் அவ்வளிகள் வர, வர, மேற்றிசைப் போக்கு மிகுந்தனவா யாவன. அவை, வடமேற்காயும், தென்மேற்காயும் வயங்குமாறு யாவன; ஒக்கற் சுட்டுவரியினின்றுள்ள சேய்மைகளினளவுகள் குறைத்துவர, வர, வட-தென்-போக்கு மிகக் குறைந்தும், மேற்றிசை யியக்கமே சிறந்தும், வருவதாகும். ஆகவே, அவ்வளிகள், வடவரைக் கோளத்தில் தென்மேற்குச் செலவு கொண்டனவாயாவன; தென்னரைக் கோளத்தில் வடமேற்கு நோக்கியடிப்பன. அவை செல்லும் பாண்டில்களில், முறையே, வட-கிழக்கு (தென்மேற்குக்கு எதிர்முகம்) வளிகளெனவும், தென்கிழக்கு (வடமேற்குக்கு எதிர்த்திசை) வளிகள் எனவும் ஏற்கப்படுவன. அங்ஙனமான வளிகள் 'வணிக வளிகள்' (Trade winds) எனப்படுவன. கடற் பரப்புக்கள்மீது, அவை பொதுவாகத் திட்ட நிரலின்படி வயங்குவன. அங்ஙனம், அவை, வசையில் புகழின்திரிபின்றி தம் வழியே யேகுகின்ற வானமையின், அவ்வாறு பெயரிடப்பட்டவை எனச் சிலர்கூறுவார். பாய்மரக்கலங்களில் திரைகடலோடினபடியே வணிகம் பெருக்கமடைந்திருந்த முன்னுட்போது, அக்கப்பலோட்டிகள் தின்ன நம்பிக்கையை, அவ்வளிகள் தம் ஒழுங்கான போக்கின் பொருட்டாய்ப் பெற்றிருந்தன வானமையின், அவை 'வணிக வளிகள்' என்ற பெயரைப் பெற்றன என வேறு சிலர் பகர்வார்.

ஒக்கற் சுட்டுவரியினின்று கிளம்பி காற்றுப்பரவையின் மேற்பாங்குகளின் வழியேயேகும் வளிகள், வணிகவளிகளுக்கு எதிர்முகமான திசைகளில் செல்வன. ஆதலால் அவை, 'எதிர்வணிக வளிகள்' (Anti-trade winds) எனப்படுகின்றன.

'வணிகவளிகள்' என வயங்குகின்றவை, ஆய நிலைப்புக்களினின்று கிளம்பின காற்றுக்களின் பகுதிகளானவையே. அவை, 20° முதல் 60° வரையான குறுக்கை விரித்தனை களினமைந்த இடங்களில், வடமேற்கு-தென்மேற்கு வளிகள் என அடிப்பன. சுழற்சியையொட்டிய குணதிசையியக்க விரைவினளவு, மிகுதியாய்க் கொண்டே வரலின் பொருட்டாய், 20° குறுக்கை விரித்தனையைக் கடந்த பிறகு, அவற்றின் வட-தென் வாட்டப் போக்கு மிகவும் குறைந்து போவன. ஆதலால், அவை மேற்றிசை நோக்கியே அடிப்பனவாயாவன. அவற்றைப் பெறும் இடங்களில், அவை கீழ்க்காற்றுக்களாயாகி, கொண்டல்களென அழைக்கப்படுகின்றன. ஆகவே, ஒக்கற் சுட்டுவரியை நோக்கினபடி ஆய நிலைப்புக்களினின்று கிளம்பின வளிகள் எவையும் அவ்வரியை அடையாமற் போய்விடுவன. எனவே, அவ்வரியின் பாங்கர்களில் மிகக்குறைவாகவே காற்றியக்கம் இருப்பதாகும். மேற்கூறப்பட்டவாறுன 'கொண்டல்கள்' 5° என்ற குறுக்கைவிரித்தனையினமைந்த பாங்கர்களில் வீசுவன.

(தொடரும்.)

பரத்தையிற் பிரிவு.

பண்டித. ந. ரா. சுந்தரராசன்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

தமிழ்பயிலும் மாணவராயினார்க்குத் தமிழிலக்கிய இலக்கண நூற்களின்கண் அவ்வப்போது நேர்ந்துவரும் ஐயங்கள் பலவற்றுள், பரத்தையிற் பிரிவு குறித்த செய்தியும் ஒன்றாகும். இச்செய்தி மாணவர் தம்மையே யன்றிப் பேருரையாசிரியர்களின் உள்ளங்களையும் பெரிதும் கலங்கச் செய்துளதென்பது, அன்னோர் பன்னெறிப்பட இதற்கு அமைதி கூற முயன்றுள்ள திறம்பற்றியே யறிந்து கொள்ளப்படும். நம் பண்டைப் பழம்பெருந் தமிழ்நாட்டில்,

> "உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
> செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
> தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு"

ஆடவர் பெண்டிர் என்னும் இருபாலாரும் வாழ்ந்து வந்தனராக, பரத்தைமை யொழுக்கம் பழிதரும் இழிதகு செயலென இனிது துணியப்பட்டிருந்தும், உருவும் திருவும் அறிவும் ஆற்றலும் குணனும் முதலியவற்றாற் பொருவிறந்த தலைமகன் ஓதல் காவல் பகைதணிவினை, வேந்தற்குற்றுழி, பொருட்பிணி என்பனவற்றின் கண்ணன்றிப் பரத்தையர் மாட்டும் பிரிவனென இலக்கணம் வகுத்ததும், இலக்கியங்களுள்ளும் விரித்துரைத்துப் போந்ததும்என்னை? இது நம் தமிழ்நூல்களுக்கும் தமிழ்ச் சான்றோர்களுக்கும் இழுக்காகுமன்றே? என்பன முதலிய குழப்பமிக்க பல ஐயங்கள் மாணவர்கட்கு நிகழ்கின்றன. தமிழ் நூல்களை இகழ்ந்து கூறித் திரிவாரும் இன்னனைய இடங்களையே சுட்டிக் காட்டிக் கடாவுகின்றார். ஆதலின் இதுபற்றிச் சிறிது இயன்றவளவில் ஆராய முற்படுதல் நலமே யாம்.

தமிழ்நூல்களில் வரும் பரத்தையிற் பிரிவுபற்றிப் பலரும்பலதிற அமைதிகள் கூறுவர். அவ்வமைதி யுரைவகைகளை யெல்லாம், நாம் அறிந்துகொள்ள வேண்டுவதோடு அவையிற்றுள் ஒன்றற்கொன்று வன்மை மென்மைகள் உடையவாமாறும் உணர்ந்துகோடல் இன்றியமையாத தாகலின், அவையிற்றினை நிரலே கிளந்தெடுத்துக்கொண்டு ஆராய்ந்து முடிபு காண்பாம். முதலாவதாக; நூற்பொருள்களைப் பகுத்தறிவு துணையாக ஆராய்ந்து பாராமலே அவையிற்றை யெல்லாம் அங்ஙனமே முழுமையும் பெருமெய்யாகத் துணிந்துவிடாமல், எவற்றினையும் தீரத்தெளியத் தேர்ந்தறிந்தே நல்லனவாயிற் கொள்ளுதலும்,அல்லனவாயிற்றள்ளுதலும் வேண்டும். எனவே, இவ்வாற்றாற் பரத்தைமையொழுக்கம் அறப்பெரிதும் குற்றமென யாவரானும் தெற்றென உணரப்படுதலின் அதுபற்றிக் கூறும் தமிழ்நூற் பகுதிகளும் குற்றமாய் முடிவனவேயாம் என்பதும், ஆதலின் அக்குற்றத்தினைச் சிறிதெனினும் பிறிதுரை கூறி மறைப்பக்கருதாது ஒளிவுமறைவின்றிக் குற்றமென உடம்பட்டுக் கோடலே வேண்டும் என்பதும் சிலர்கருத்து.

அஃதொக்குமன்றுயினும், குற்றமாயினன்றே அதனைக் குற்றமென உடம்பட்டுக் கொள்ளற்பாலம்? பரத்தைமை யொழுக்கம் குற்றமென்பது துணியப்பட்டதேயன்றி, அதுபற்றிக் கூறும் தமிழ் நூற் பகுதிகளும் குற்றமாவனவேயாம் என்பது இனிது துணியப் படாமையானும், ஈண்டுக் குற்றமெனக் கற்பிக்கப்படுவது நம்முடைய தன்றி முற்ற உணர்ந்த பெற்றியராய நம் முன்னோர்களதாயிருத் தலின், அதுபற்றி நாமொன்றும் விரைந்து துணிந்து விடுவதற்கில்லை யாகலானும், இங்ஙனம் நன்றினிது ஆராயாது வைத்தே குற்றமெனத் துணிந்து முடித்துக் கூறி விடுதலால், பின்னர் ஆராய்ச்சி தடை யுற்று அறிவு வளர்ச்சிக் கேதுவின்றிப் போதலானும் அவ்வாறு கருதுதல் அமையாதென்பது.

ஒருசிலர், இவ்வுலகின் பல பகுதிகளிலும் மாந்தர்களாயினுர் தாந்தாம் இன்பந் துய்க்கும் நெறிமுறைகளை யெல்லாம் எடுத்துக் காட்டி, அவையிற்றுப் பரத்தையிற் பிரிவும் ஒன்றாய்ப் பெரும்பாலும் எங்கும் இயல்பாய் நிகழ்ந்து வருதல் காண்டுமாகலானும், உலகியல் வழக்கினின்றும் வேறுபட்டதன்றாய் அதனோடொத்து நடக்கும் பெற் றிமையுடைமையே நூல் வழக்கிற் குரியதாகலானும், ஏனைமொழி இலக்கியங்களினும் இதுபோன்ற செய்திகள் பல வருதலானும் தமிழ் நூற்களில் வரும் பரத்தையிற் பிரிவும் அத்துணை இழுக்குடைத்தன் றென மறுத்துக் கூறுவர்.

அஃதெமக்கும் ஓராற்றுற் சித்த சாதனமே யாமாயினும், அங் ஙனம் கூறுதற்கண்ணும் குற்றம் உளதென்பது. என்னையோ வெனின், மாந்தராயினுர் ஆங்காங்கே இன்பநுகரும் நெறிமுறைகளுள் பரத்தைமை யொழுக்கமும் ஒன்றாய் எங்கும் இயல்பாய் நிகழ்ந்து வருகின்றதெனின்-அதன் கருத்து, ஆதலான் அது குற்றமன்று என்று குறிப்பிற் பெறப்பட வைப்பது போறலானும், பெரும்பாலும் எங்கும் எவர்மாட்டும் நிகழ்ந்து வருதல்பற்றியே ஒரு செயலைக் குற்றமன் றெனத் துணிந்து விடுதல் சாலாதாகலானும்; உலகியலோடொத்து நடப்பதே நூல் என்ப துண்மையே யாயினும், அதன் கருத்து உலகிய லுக்கு முழுமாறாய் உலகியற்றொடர்பே சிறிதேனும் இன்றி அறவே வேறுபொருளை நுவலாமல், உலகியலினையே இயைந்தொட்டி நின்று அதன் குற்ற நற்றங்களின் பெற்றியினை விளக்கிக் காட்டி மன்பதை வாழ்விற்கு இன்பமும் நலமும் செய்து நடாத்தலே என்பதே யாமாக லானும்; ஏனைமொழி இலக்கியங்களினும் இதுபோன்ற செய்திகள் வருகின்றனவாலெனின்—அதுபோது தமிழ் நூல்களையும் அவையிற் றோடு ஒப்பித்ததேயா மன்றித் தமிழ் நூல்கட்கு ஏனைமொழி இலக் கியங்களினும் மிக்க தனிச்சிறப்பும் பெருமையும் உண்டென்பதனை விளக்கிக் காட்டாதொழிதலானும் இவ்வாறு கூறுதலும் செவ்விதன் றென்பது.

இனிப் பிறிதொருசிலர், ஆண்மக்கள் மிகுதியாகப் போர்க்களஞ் சென்று பொருது மாண்டுபோக நேருதலின் மக்கட்கணக்கில் ஆடவர் தொகை சுருங்கியொழிய, அத்தொழிற்குரிய ரல்லாத பெண்மகளிர் தொகை பெருகி நிற்றலையும்; பொருளியலிற் பெண்மகளிர்க் குரிமை

யில்லா அடிமைநிலைமையினையும் ; மகப்பேற்றிற்குப் பின்னர்ப் பெண் மகளிர்தம் அன்பிற் பெரும்பகுதியும், காலமும், கருத்துமெல்லாம் அவரீன்றெடுத்த அருமைக் குழவிகட்கே உரிமையாய்ப் போதலையும் போல்வனவற்றைப் பரத்தையிற் பிரிவுக்குக் காரணங்களாகக் கூறி எடுத்துக் காட்டுவர். இவைகளைப் பற்றிய உண்மைகள் எங்ஙனமாயினும், இவையெல்லாம் பரத்தைமை யொழுக்கம் உலகியலின்கண் நிகழுதற்குக் கூறுதற்குரிய காரணமாவனவே யன்றித் தமிழ்நூலின்கண் பரத்தையிற் பிரிவு பேசப்படுவதெற்றுக்கு? என்னும் கடாவிற்கு விடைதருவன அன்மையின், ஈண்டையஆராய்ச்சிக்குவேண்டுவன அல்லவாம் என்பது.

வேறுசிலர், கோவலனை யன்றிப் பிறர் யாவரையும் மனங்கொள்ளாத மாதவியின் காதற் கற்பொழுக்க மாட்சிமையினை விதந்தெடுத்துக் கூறி, அத்தகு மாதவியினை யொப்பவே அக்காலத்துப் பரத்தையரெல்லாம் ஒருவனையேபற்றி நின்றொழுகிய பெருநலஞ் சான்றவர் எனவும், ஆதலின் அவர்வயிற் பிரியும் பிரிவு இழுக்குடைத் தன்றெனவும் இயம்புப. ஆயினும்,

"... ... ...
பத்தினிப் பெண்டி ரல்லேம் பலர்தங்
கைத்தூண் வாழ்க்கை கடவிய மன்றே
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில்
யாழினம் போலும் இயல்பின மன்றியும்
நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்
வினையொழி காலைத் திருவின் செல்வி
அனையே மாகி ஆடவர்த் துறப்பேம்"

என்றெல்லாம் மணிமேகலைபால் சித்திராபதி கூறுவதாக வருவனதாமே, அக்காலத்துப் பரத்தையரும் அவர் கூறும் நிலைமையினரல்லாமையினை வெளிப்படுத்து விடுதலின், அவ்வாறு கோடலும் அமைவதன்றென்பது.

இனிக் களவியலுரையின்கண், ஆசிரியர் நக்கீரனுர் பரத்தையிற் பிரிவு நிகழ்தற் கேதுவென்று கூறப்படுவனவாக, எடுத்துக் கூறி ஆராய்ந்து கழித்து விலக்கும் கருத்துக்கள் தாமும் ஓராற்ருல் நமது ஐயந் தெளிவிப்பனவே யாம். அவை, அறிவும் திருவும் ஆண்மையுமெல்லாமுடைய தலைமகன் அருளும் பெரிதுடையனுகலான் தன் நலம் பற்றிப் புறப்பெண்டிர் காதல் செய்தலை யறிந்தவழி அவர்தம் குறைகளைந்து தலையளியாது விடுதல் அருளியல்பிற் கேற்பதன்ருகலின் அது குறித்துப் பிரியும், நிறையிலனுய் அன்பிற் பிரியும் என்பதன்று என்றும்; இன்னுதை தொன்றுளதாய வழியே இனியதன் இன்பம் அறியப்பெறுதல் இவ்வுலகத் தியற்கை யாதலின், வைகலும் தீம்பாலே துய்த்துச் செல்வானொரு மகன் இடையிடை புளிங்கறியும் உண்டவழியே பாலின் சுவை தேறுமாறுபோல, இடையிடையே சிறுகுணத்தராகிய பரத்தையர் மாட்டுப் பிரிந்துவரவே தலைமகன் தலைமகளின் சிறப்பும் நலனும் அறிந்து காதல்மிகும் என்றும்; தலைமகன்தான் கலைநலம்

தேரும் திறமமைந்தானாகலின், தலைமகளின் நீங்கி ஆடல் காண்பல்
பாடல் கேட்பல் எனப் பரத்தையர்பாற் பிரிந்து, ஒருகாலத்து இரண்
டுணர்வு உடன்நில்லாமையின் தலைமகள்மாட்டுநின்ற உணர்வுமறைய
ஆண்டே மறந்து வைகிப் பின்னர் மீள்வனென்றும் இங்ஙனம் கூறப்
படுவன.

அற்றேல், இவை பொருந்துவனவாகவே காணப்படவும் ஆசிரியர்
நக்கீரனார் இவையிற்றை மறுத்தவாறு என்னையெனின்? தலைமகன்
புறப்பெண்டிர் மாட்டு அருள் காரணமாகப் பிரியுமெனின், மிக்
காரைக் கண்டால் இழிந்தாரும் உயர்ந்தாரும் இடைப்பட்டாருமெல்
லாம் காதலித்தல் இயல்பேயாதலின், அதுபற்றி அவர்மாட்டெல்லாம்
பிரியல்வேண்டின் எல்லாக் குற்றமுந் தங்கித் தலைமையொடு மாறு
கொள்ளுமாகலானும், அருள்மீக் கூர்தலால் நிகழும் அப்பிரிவு இயல்
பாய அன்பின்றி வைத்தும் நேரும் பிரிவென்பது பெறப்படுதலிற்
சிறப்பின்றாய் முடிதலானும்; இன்னாத தொன்றன் உண்மையான்
இனியதன் இன்பம் அறிதன் முறைமையால் தலைமகள் நலம் பொரு
வரிய தென்றுணரப் பரத்தையர்பாற் பிரியுமெனின் பரத்தையர்
குணத்தொடு சார்த்தித் தலைமகள் நலம் பொருவரியதென் றுணரு
மாயின், அதற்கு முன்னெல்லாம் தலைமகளின் நலங்களை மிக்கன
கொல்லோ மிக்கில கொல்லோ என்று ஐயப்பட்டு நின்றானாகல்வேண்டு
மாதலின், தம் குணங்களைத் தாமே ஐயுறுவா ரின்மையின், முன்னர்த்
தான் அவள்என்னும் வேற்றுமையிலர் என்றதனோடு முரண்கொள்ளு
மாகலானும் பொருந்துவன அல்ல என மறுத்து, ஆடலும் பாடலும்
காண்டலும் கேட்டலும்வேண்டிப் பரத்தையிற்பிரிவான் என்பார்தம்
கூற்றையே சிறிது மாற்றித் தழுவி யுரைத்துப் போந்தாரவர்.

அங்ஙனமேலவர், தாங்கூறுந் திறந்தான் யாது கூறுக எனின்
பரத்தையிற் பிரியும் தலைமகன் அவரைத் தலைமகளை எய்தி யிருந்தே
யுடையனாதல், அன்றி எய்தாததன் முன்பே யுடையனாதல் என்னும்
இருதிறத்தினுள் ஒரு திறத்தினனே யாதல்வேண்டும்; தலைமகளை
எய்தியிருந்தே பரத்தையரை யுடையனாயின் தலைமகள் குணனேயு
மன்றிப் பிறவும் இன்பஞ் செய்வன உளவாகக் கருதினான் எனவும்,
எய்தாதன்முன்பே யுடையனாயின் முன்னும் இவன்கற்ற காலமின்றிக்
காமத்துக் கெழுமி வருகின்றான் எனவும் முடியும். ஆதலின், தலைமக
னது இளமைக் காலத்தே அவன்றன் குரவர்கள் அவனறியாமையே
இவனுரிமை இதுவெனவும், இவன் யானையும் குதிரையும் இவையென
வும், மற்றுமெல்லாம் வகுத்து வைத்துத் துய்ப்ப என்றும், இங்ஙனம்
தலைமகளை எய்தாதன் முன்னரே தானுடையராய பரத்தையரைப்
பின்னொருகால் அறத்துறையும் பொருட்டுறையும் நெறிப்படியே
முடித்துத் தலைமகள்பாற் போதருமிடத்துக் குழலும் யாழும் முழவும்
இயம்பக் கண்டு கேட்டு, ஆங்குள்ளரால் அவர் தன்னுரிமை யாதலை
யறிந்து, நங்குரவர் பணி மாறுகொள்ளலாகாதென்னும் கருத்தான்
அவர் தம்மை ஏற்றுக்கொண்டு, அவர் நயப்பிப்பநயந்து அவர்பாற்
பிரிந்து வைகி மீள்வன் என்றும் அவர் கூறுவர்.

(தொடரும்.)